# மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

**MITRA TIMES - Tamil & English Monthly**


மலர்: XIII இதழ்: 4 அக்டோபர் 2026 ஆண்டு சந்தா ரூ.240/- விலை ரூ. 20/-

Vol.: XIII Issue: 4 October 2026 Annual Subscription Rs.240/- Price Rs. 20




47 குழந்தைகளை பாதுகாத்து பராமரிக்கும் ‘சாலமன்’ அப்பா!

மன உறுதி வெல்லும்!

- ஆசிரியர் கடிதம்

தினமும் முட்டை சாப்பிடலாமா!

உண்ணி பூச்சி கடித்தால் என்ன செய்ய வேண்டும்?

தேசத்துக்காக உயிர் நீத்த 24வயது இளைஞர் பகத்சிங்

## தேர்தல் ஆணையத்தின் SIR:
## தேசத்தை ஆட்டி வைக்கும் அரசியல் புயல்!

# மருத்துவ விழிப்புணர்வு முகாமில் பங்கேற்ற ஆசிரியர்!




The 22nd of September is celebrated every year as Rose Day, a Special occasion dedicated to bringing Cheer, happiness and smiles to cancer patients across the country.

Shri M.S. Moorthy, M/s.Moorthy Associates and Secretary of Mithra Charitable Trust, extended his guidance and support towards providing treatment assistance to underprivileged cancer patients through his Charitable trust.




# மன உறுதி வெல்லும்!

அன்புடையீர் வணக்கம்!

அனைவருக்கும் வர இருக்கும் ஆயுத பூஜை, விஜயதசமி ஆகிய பண்டிகை கால நல்வாழ்த்துகள். அனைவரது இல்லங்களிலும் அவர்கள் செய்யும் தொழில்களிலும் மென்மேலும் சிறப்பாக வளர்ந்திட வாழ்த்துகிறேன்.

கடந்த செப்டம்பர் 22ஆம் தேதி சென்னை வடபழனியில், பீட்டர்சன் கேன்சர் சென்டர் நடத்திய "ROSE DAY"என்ற நிகழ்ச்சியின் சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்பட்டேன். ஆண்டுதோறும் நடத்தப்படும் இந்த நிகழ்ச்சி புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதலாகவும், ஆதரவாகவும், நம்பிக்கையாகவும் இருக்கிறோம் என்பதை எடுத்துச் சொல்லும் நிகழ்ச்சி இது. "இந்த நிகழ்ச்சியில் நான் பேசும்போது முதலில் நோயைக் கண்டு நீங்கள் பயப்பட வேண்டாம் அதற்கு தேவையான சிகிச்சைகளை எடுத்துக் கொண்டால் சிரமம் இருக்காது. குறிப்பாக ஆரம்பத்திலேயே இதை கண்டறிந்து மருத்துவர்கள் சொல்லுகின்ற ஆலோசனைப்படி சரியாக நடந்தால் உங்களுக்கு தீர்வு ஏற்படும். குறிப்பாக இதை எதிர்கொள்கின்ற மன உறுதி உங்களுக்கு இருக்க வேண்டும் மன உறுதி இல்லாவிட்டால் எந்த செயலையும் செய்வதற்கு முடியாது.

இந்த நிறுவனத்துக்கு எங்கள் மித்ரா









குழுமம் சார்பில் இயன்ற உதவியை செய்வோம்". என்று குறிப்பிட்டேன்.

இது அவர்களுக்கு மட்டுமல்ல மனிதராக இருக்கின்ற ஒவ்வொருவருக்கும் மன உறுதி இருக்க வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்திருக்க முடியாது.

மனத்தைப் பத்திரமாகப் பாதுகாத்து கொள்வது மிகப் பெரிய சவாலாக இருக்கிறது. எந்த சமூக வலைத்தளத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, செய்தி சேனல்கள், நாளிதழ்களை பார்த்தாலும் சரி, அதீத வன்முறை தான் வெளியே தெரிகிறது.

இன்னொன்று போர்னோகிராபி. அல்லது குடும்ப உறவுகளை மீறிய பழக்கங்கள், அதனால் ஏற்படும் விளைவுகள்.

அதீத வறுமை பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகளின் பிரச்னைகளுக்கு காரணமாக இருக்கின்றன.

மீண்டும் மீண்டும் இதே காட்சிகள், இதே செய்திகள்... முகங்கள் மட்டும் மாறுகின்றன; அவலம் ஒரே மாதிரியாகத் தான் இருக்கிறது. இதற்கு மாற்றாக, அல்லது மறக்கடிக்கும் விஷயங்களாக இருப்பவை பொழுதுபோக்கு அம்சங்களான சினிமாவும் தொலைக்காட்சி தொடர்களும் தான். அவை வேறு விதமான அழுத்தங்களை ஏற்படுத்துகின்றன. உண்மையில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொருவரும் மிகப் பெரிய மனக்கிலேசத்துடன் தான் பயணம் செய்கின்றனர். பேருந்தில், மெட்ரோவில் போகும்போது மற்றவர்களைப் பார்த்துக்கொண்டிருப்பேன். ஒருவித இறுக்கம் தென்படும். அவர்கள் தங்களுக்குள்ளேயே பேசிக் கொள்கிறார்கள் என்பதை பார்க்க முடிகிறது. உள்பேச்சை கேட்க பிடிக்காமல் தான் பலரும் காதுகருவி மூலம் பாடலை ஒலிக்க விடுகிறார்கள். அல்லது யாரோ ஒருவருடன் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். ஒருவித தப்பித்தல். பாலத்தை விரைந்து கடத்தல் போல நேரத்தை விரைந்து கடத்தல்.

ஒரு காலத்தில் பெரும்பாலோருக்கு ஏதேனும் ஒரு ஹாபி இருந்தது. விளையாட்டு, ஓவியம், இசை, இலக்கியம் என்று கவனத்தை கட்டுப்படுத்தும் பழக்கங்கள் இருந்தன. நான் கடந்து போகும் கிளை நூலகத்தில் முன்பு நிறைய பயனாளிகளைப் பார்த்திருக்கிறேன்; இப்போது வெறிச்சோடி கிடக்கிறது.

உண்மையில் மனநலத்தைக் காத்துக்கொள்வதற்கு இன்றைக்கு இருக்கும் ஒரு வாய்ப்பு, மீண்டும் ஹாபிக்களைத் தேடி தேடி வளர்த்துக்கொள்வது தான்.

எந்தச் சூழலிலும் மனதை உறுதியோடு வைத்துக் கொண்டால் வாழ்க்கை செழிக்கும்.

**- எம்.எஸ். மூர்த்தி**

# மித்ரா டைம்ஸ்

மித்ரா - 13 அக்டோபர் 2026 டைம்ஸ்- 4

ஆசிரியர்/வெளியீட்டாளர்:
**திரு .எம். எஸ். மூர்த்தி**

நிர்வாக ஆசிரியர்:
**திருமதி .சுஜாதா மூர்த்தி**

செய்தி ஆசிரியர்:
**மணவூர் கி.விடாரண்யம்**
9789837069

இதன் சிறப்பு ஆலோசகர்கள்:
Dr. **ஆ. தமிழ்மாறன்** எம்.ஏ.எம்.பில்
இயக்குனர் **மு.இரவீந்திரன் (எ) ரவி பார்கவன்**
**எஸ்.ரங்கராஜ்**
**ஆர் .சையது சித்திக்**

நிர்வாக அலுவலர்;
**ஆர். குணசேகரன்**

செய்தி இணை ஆசிரியர்கள்:
**மதுரை விஜயா கண்ணன்**
**கோவை பி.முத்துராஜ்**
**சென்னை ராயபுரம் வி. குருசாமி**

**திருவள்ளூர் து.சண்முகம் எம் .ஏ**

சட்ட ஆலோசகர்;
**வி.என்.பிரசாத்** எம்.ஏ.பி.எல்.

செய்தியாளர்கள்:
**பி.வினோத்**
**பா. விஜயலட்சுமி**
**ராஜேஷ் கணேஷன்**

வடிவமைப்பு:
vidapublications@gmail.com

சந்தா மேலாளர்;
**வி.சுபத்ரா**
**9003107102**

அலுவலகம்:
001 இன்ஞ்சக்கல் பிளாக்
சித்ரா அவென்யூ
9 சூளைமேடு ஹை ரோடு
சென்னை. 94
தொடர்புக்கு:
044-23744661,23743007/08
Mitra times 2015@gmail.com
www.mitraimes.com


# உள்ளே...




6 தமிழக அரசியலை மடை மாற்றிய இடைத்தேர்தல்!



12 கடலுக்கு அடியில் பூம்புகார் நகரம்!



16 47 குழந்தைகளை பாதுகாத்து பராமரிக்கும் ‘சாலமன்’ அப்பா!



22 தேசத்துக்காக உயிர் நீத்த 24வயது இளைஞர் பகத்சிங்



34 வாழ்க்கையில் மகிழ்ச்சியும் நிரந்தரமல்ல துயரமும் நிரந்தரமல்ல!



46 பிள்ளைகளின் சுதந்திரமும் பெற்றோர்கள் பொறுப்பும்!

# தமிழக அரசியலை மடை மாற்றிய இடைத்தேர்தல்!

**த**மிழக வெற்றி கழகம் ஆட்சிப் பொறுப்பேற்று தனது பெரும்பான்மையை நிரூபிக்க தி.மு.கவின் கூட்டணியில் இருந்த கட்சிகள் ஆதரவு தந்தன. தேர்தலுக்கு மறுநாளே காங்கிரஸ் கட்சி போய் சேர்ந்தது. பிறகு விஜய் பெரும்பான்மை நிரூபிப்பதற்கு முன்பாக மு .க. ஸ்டாலின், அன்புமணி ராமதாஸ் ,சீமான், இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள் அலுவலகம், திருமாவளவன், முஸ்லிம் லீக் அலுவலகம் ஆகியவற்றுக்கு நேரில் சென்றார். அதோடு அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களின் ஒரு பிரிவை சேர்ந்தவர்களை நேரில் சந்தித்து அவர்கள் ஆதரவு கோரினார். திரு வேலுமணி, சி.வி.சண்முகம் தலைமையில் 25 பேர் கொண்ட சட்டமன்ற உறுப்பினர்கள் குழு அ.தி.மு.க.வில் இருந்தபடியேஆதரவு தெரிவித்தது. இதனால் 107 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட த.வெ.க. சட்டப்பேரவையில் 144 உறுப்பினர்களுடன் பெரும்பான்மையை நிரூபித்தது.





ஆறு மாதம் வரை பெரும்பான்மை நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லாத சூழலில் அந்த ஆறு மாதத்திற்குள் எப்படியாவது தன்னுடைய கட்சிக்கு 15 சட்டமன்ற உறுப்பினர்களை கொண்டு வந்த விட வேண்டும் என்ற நோக்கத்தில், அதிமுகவில் இருந்து வருபவர்களை தனது கட்சியில் இணைத்துக் கொண்டு அதற்கு முன்பாக அவரது சட்டமன்ற உறுப்பினர் பதவி ராஜினாமா செய்ய வைத்தார். இதனால் அதிமுகவிலிருந்து வருபவர்கள் எண்ணிக்கை கூட ஆரம்பித்தது. மதுராந்தகம், தாராபுரம், பெருந்துறை, அம்பாசமுத்திரம் விராலிமலை ,கரூர், என்று தொடர்ச்சியாக வந்து கொண்டிருந்த நேரத்தில் நீதிமன்றத்தில் வழக்கு போடப்பட்ட சூழலில் மேற்கொண்டு எம்.எல்.ஏ.க்கள் சேரவில்லை.

இரண்டு தொகுதிகளில் போட்டியிட்ட விஜய் ஒரு தொகுதியை ராஜினாமா செய்ததால் திருச்சி கிழக்கு தொகுதி காலியாக இருந்தது. ஆக ஏழு சட்டசபை தேர்தலுக்கு இடைத்தேர்தல் நடத்தி உறுப்பினர்களை அதிகப்படுத்தலாம் என்று விஜய் கணக்கு போட்டார். ஆனால் மதுராந்தகம் தாராபுரம் இரண்டு தொகுதிக்கு மட்டுமே இடைத்தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது. மீதி ஐந்து தொகுதிக்கு வழக்குகள் முடிந்த பிறகு தான் தேர்தல் நடத்த முடியும் என்று அறிவித்து விட்டது.

மதுராந்தகம் தாராபுரம் ஆகிய இரண்டு தொகுதிகளுக்கு இம்மாதம் ஆறாம் தேதி தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது.

மதுராந்தகம் தாராபுரம் ஆகிய தொகுதிகளில் ஏற்கனவே அதிமுக சார்பில் நின்று வெற்றி பெற்றவர்களுக்கு மீண்டும் த.வெ.கவில் சீட்டு கொடுத்ததால்

பொதுமக்கள் மத்தியிலும் எதிர்ப்பு ஏற்பட்டது. இந்த நிலையில் ஏற்கனவே ஆட்சிக்கு ஆதரவளித்து வந்த கம்யூனிஸ்ட் கட்சி தனியாக இரண்டு தொகுதிகளிலும் போட்டி போட்டது. தி.மு.க. ,அ.தி.மு.க, த.வெ.க., கம்யூனிஸ்ட், நாம் தமிழர் கட்சி என்று ஐந்து முனைப் போட்டி நிலவியது.







எப்படியும் தாங்கள் ஜெயித்து விடுவோம் என்ற எண்ணத்தில் ஆளுங்கட்சி இருக்கும்போது, ஏற்கனவே வெற்றி பெற்று 15 நாட்களுக்குள் ராஜினாமா செய்து விட்டு மீண்டும் அவர்களையே நிற்க வைப்பது என்பது எதிராக பார்க்கப்பட்டது. களத்தில் தி.மு.க அ.தி.மு.க தங்களது வழக்கமான பாணியில் பிரச்சாரத்தை முடித்து விட்டனர். ஆளுங்கட்சியை பொறுத்தவரை விஜய் மட்டுமே மாஸ் என்ற நிலையில் அவரே இரண்டு முறை களத்துக்கு போக வேண்டிய சூழல் உருவாகியது.

இடைத்தேர்தல் சூடு பிடித்து களைகட்டிய சூழலில் இரண்டு திட்டங்களை விஜய் தொடக்கி வைத்தார். தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம், தொலைதூர பேருந்துகளிலும் மகளிர் கட்டணம் இல்லாமல் பயணம் செய்யும் வெற்றி பயணம் திட்டம் ஆகியவை பொதுமக்களின் எதிர்ப்பை நீர்த்துப்போக செய்யலாம் என்று ஆளுங்கட்சி கருத்தில் கொண்டு செயல்பட்டதாக அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

அத்துடன் மதுராந்தகம் தாராபுரம் இரண்டு தொகுதியிலும் ஏற்கனவே அதிமுகவில் நின்று வெற்றி பெற்ற மரகதம் குமரவேல், சத்தியபாமா ஆகிய இருவருக்கும் அதிமுக கடும் எதிர்ப்பை தெரிவித்ததோடு மட்டுமல்லாமல் பொது மக்களையும் போராட்டத்தில் ஈடுபட வைத்து பிரச்சாரம் செய்தனர். அ.தி.மு.க பொதுச் செயலாளர் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் இந்த முறை தேர்தல் பிரச்சாரத்தில் முதலமைச்சர் விஜய்யை கடுமையாக விமர்சனம் செய்தது அரசியல் நோக்கர்களை வியப்படை வைத்தது.

தனது கொங்கு பாணியில் அவர்"அண்ணனாக இருப்பேன் தம்பியாக இருப்பேன் மாமனாக இருப்பேன் மச்சானாக இருப்பேன்"என்று முதலமைச்சர் சொல்கிறார். ஆனால் ஒருவர் மனைவியோடும் தந்தை தாயோடும் குழந்தைகளோடும் இருப்பதுதான் சரியான வாழ்க்கையாக இருக்கும்.

அப்படிப்பட்ட வாழ்க்கையை நாங்கள் வாழ்கிறோம்" என்று சொன்னவுடன் கூடியிருந்த கூட்டம் ஆர்ப்பரித்தது. ஏற்கனவே போன சட்டமன்ற தேர்தலில் தி.மு.கவை குறிப்பாக மு. க. ஸ்டாலின் மற்றும் உதயநிதி பற்றி அவர் தேர்தல் பிரச்சாரத்தில் பேசியது நினைவு இருக்கலாம்.

அமைச்சர் அருண் ராஜ் அவர்கள் பிரச்சாரத்தில் பேசும் போது திமுக அதிமுக கூட்டணி வைத்திருக்கிறது என்றும் மதுராந்தகத்தை தி.மு.க.வுக்கும் தாராபுரத்தை அ.தி.மு.கவுக்கும் பிரித்துக் கொண்டு உள்ளுக்குள் கூட்டணி வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று பேசினார்.

பிரச்சாரம் முடிந்து வாக்குப்பதிவு முடிந்துள்ள சூழலில் முடிவுகள் 9ஆம் தேதி தெரியவரும். இந்த தேர்தல் முடிவுகள் தமிழக அரசியலை மடைமாற்றம் செய்யும் இடைத்தேர்தலாக அமையும்.

**- தம்பி முருகானந்தம்**

# மனிதர்கள் வேலை இழக்க மாட்டார்கள் – எலன் மஸ்க் உறுதி



சமீபகாலமாகவே பல பிரபலமான முக்கிய மென்பொருள் நிறுவனங்கள் பலரையும் வேலையை விட்டு தூக்கி விட்டன. இதையடுத்து AI மனிதர்களுக்கு எதிராக மாறும்.. மென்பொருள் துறையில் பலரும் வேலை இழப்பார்கள் என்றெல்லாம் பலரும் கூறி வருகிறார்கள்..

இது மென்பொருள் துறையில் பணியாற்றும் ஊழியர்களிடம் பீதியை கிளப்பியிருக்கிறது. இந்நிலையில், இது தொடர்பாக கருத்து தெரிவித்த எலன் மஸ்க் 'AI யால் வேலை இழப்பு ஏற்படாது.. நமது வேலை மாற்றமடையும்.. இதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்.. இன்று கணினி செய்யும் கணக்குகளை ஒரு காலத்தில் மனிதர்கள் பெரிய அலுவலகத்தில் உட்கார்ந்து செய்து கொண்டிருந்தனர். அதெல்லாம் இப்போது மாறவில்லையா? அதுபோல சூப்பர் இன்டெலிஜென்ஸ் மற்றும் அதிநவீன ரோபோக்களால் நம் வாழ்வும் மேம்படும்.. வேலை வாய்ப்புகள் மாற்றமடையும்' என்று தெரிவித்திருக்கிறார்.

AI தொழில்நுட்பத்தால் எதிர்காலத்தில் மனிதர்களின் வேலைகளில் மாற்றங்கள் (Evolution of roles) ஏற்படுமே தவிர, தற்போதைக்கு வேலைவாய்ப்புகள் முற்றிலுமாகப் பறிபோகாது என்று டெஸ்லா மற்றும் xAI நிறுவனத்தின் தலைவர் எலான் மஸ்க் (Elon Musk) சமீபத்திய வெள்ளை மாளிகை கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.



எஸ்.சூர்யா

"முன்பு வங்கிகளில் வட்டி கணக்கிட தனி மனிதர்கள் தேவைப்பட்டனர். தற்போது டிஜிட்டல் கணினிகள் அதைச் செய்கின்றன. அதற்காக யாரும் பழைய காலத்திற்குச் செல்ல விரும்புவதில்லை. அதேபோல, AI-ஆல் வேலைகளின் தன்மை மாறுமே தவிர வேலைகள் முற்றிலும் அழியாது" என்று எலான் மஸ்க் குறிப்பிட்டுள்ளார்.

அபரிமிதமான காலம் (Age of Abundance): சூப்பர் இன்டெலிஜென்ஸ் (SI) மற்றும் ரோபோக்கள் மூலம் எதிர்காலத்தில் மருத்துவ வசதிகள் மற்றும் பொருட்கள் அனைவருக்கும் தாராளமாகக் கிடைக்கும்.

கம்ப்யூட்டர் சார்ந்த டிஜிட்டல் வேலைகளை (எடுத்துக்காட்டாக: கோடிங், டேட்டா பகுப்பாய்வு) AI வேகமாக மாற்றியமைக்கும். ஆனால், பிளம்பிங், எலக்ட்ரிக்கல், கட்டுமானம் போன்ற உடல் உழைப்பு சார்ந்த நிஜ உலக வேலைகளுக்கு (Physical jobs) நீண்ட காலத்திற்குப் பாதிப்பு இருக்காது.

Universal High Income: ஒருவேளை எதிர்காலத்தில் ரோபோக்கள் மனித வேலைகளைச் செய்தாலும், மக்களுக்குப் பணத்தட்டுப்பாடு வராமல் தடுக்க அரசாங்கங்கள் "Universal High Income" (அனைவருக்கும் அதிகபட்ச வருமானம்) வழங்க வேண்டியிருக்கும் என்றும் அவர் கணித்துள்ளார்.

ஒட்டுமொத்தமாக, AI-ன் மாற்றம் மனிதகுலத்திற்குப் பெரிய நன்மைகளைத் தரும் ஒரு பிரகாசமான எதிர்காலமாக இருக்கும் என்பதே மஸ்க்கின் தற்போதைய கருத்தாகும்

# தேர்தல் ஆணையத்தின் SIR:

# தேசத்தை ஆட்டி வைக்கும் அரசியல் புயல்!

தமிழ்நாடு, கேரளா, மேற்குவங்கம் உள்ளிட்ட மாநிலங்களில் கடந்த ஏப்ரல் மாதம் சட்டமன்ற தேர்தல் நடைபெற்றது. முன்னதாக பீகார் மாநிலத்திலும் தேர்தல் நடைபெற்றது. தேர்தலையொட்டி வாக்காளர் பட்டியலில் சிறப்பு சீர்திருத்தமான எஸ்ஐஆர் பணி நடைபெற்றது. இதில் ஏராளமான முறைகேடுகள் நடைபெற்றதாக எதிர்க்கட்சிகள் புகார் தெரிவித்தனர். தற்போது தேர்தல் ஆணையத்திற்குள்ளேயும் இது புகைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

தேர்தல் ஆணையர்களாக உள்ள சுக்பீர் சிங் சந்து மற்றும் விவேக் ஜோஷி எஸ்ஐஆர் குளறுபடி குறித்து ஆட்சேபனை தெரிவித்தனர். கடந்த 10 மாதங்களில் 14 முறை எழுத்து பூர்வமாக எதிர்ப்பு தெரிவித்தனர். புதிய வாக்காளர் இணைப்பு, பழைய வாக்காளர்களை நீக்குதல், மேல்முறையீடு, ஷாப்ட்வேர், பார்ம் 6 திருத்தங்கள் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் அந்த புகாரை பொருட்படுத்தவில்லை.

இந்த விவகாரம் தேசிய அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. தேர்தல் ஆணைய செயல்பாட்டில் மத்திய பாஜக அரசின் தலையீடு இருப்பதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. "இந்திய தேர்தல் முடிவுகள் திருத்தப்பட்டுள்ளது. பாஜக தொடர்ந்து ஆட்சியில் இருப்பது எப்படி. மோடியும், அமித்ஷாவும் சதி செய்துள்ளனர். ஞானேஷ்குமார் பதவி விலக வேண்டும். அவரை அரசுத்தரப்பு சாட்சியாக சேர்க்க வேண்டும் "என்று நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி கூறினார்.






இதை கண்டித்து காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் சார்பில் நாடு முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டம், பேரணி நடத்தப்பட்டது. இதேபோல, ஞானேஷ் குமார் 48 மணி நேரத்தில் பதவி விலக வேண்டும். அவரை கைது செய்ய வேண்டும். அவர் பதவி விலகாவிடின் போராட்டத்தில் ஈடுபடுவோம்" என்று கடந்த வாரம் கரப்பான் பூச்சி ஜனதாதளம் அறிவித்தது. ஞானேஷ்குமார் விலகிவில்லை என்பதால் கரப்பான் பூச்சி ஜனதாதளம் அக்டோபர் 2 (இன்று) நாடு தழுவிய போராட்டத்தில் ஈடுபடவதாக அறிவித்தது.

மும்பையை மையமாக கொண்டு அக்கட்சி போராட்டம் நடத்தவுள்ளது. மும்பை சிவாஜி பார்க்கில் நடைபெறும் போராட்டத்தில் அந்தக் கட்சியின் நிறுவனர் அபிஜித் தீப்கே உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொள்ளவுள்ளனர். ஞானேஷ்குமார் மீது கிரிமனல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி போராட்டம் நடைபெறவுள்ளது. டெல்லி, பெங்களூர், கொல்கத்தா, சென்னை, கோவை உள்ளிட்ட நகரங்களிலும் போராட்டம் நடைபெறவுள்ளது.

தேவைப்பட்டால் ஜந்தர் மந்தரில் போராடுவோம் என்றும் தெரிவித்துள்ளனர். இன்று முதல் கரப்பான் பூச்சி கட்சி தொடர் போராட்டத்தில் ஈடுபடவுள்ளது. நீட் தேர்வு வினாத்தாள் கசிவு உள்ளிட்ட விவகாரங்களை கண்டித்து டெல்லி ஜந்தர் மந்தரில் கரப்பான் பூச்சி ஜனதா தளம் நடத்திய போராட்டம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர்களின் கோரிக்கையை ஏற்று மத்திய அமைச்சராக இருந்த தர்மேந்திர பிரதான் பதவி விலகினார். இதனால் வரும் நாட்களில் இந்த விவகாரம் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது!

# மூன்றாம் உலகப் போர் வராமல் தடுத்த இந்திய விமானி!







நடுவானில் துபாயில் இருந்து இஸ்ரேல் நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஃபிளைதுபாய் விமானத்தில் நடந்த பயங்கர சதித்திட்டம் முறியடிக்கப்பட்டதன் பின்னணியில், சர்வதேச அளவில் மிக அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளியாகி வருகின்றன. 170க்கும் மேற்பட்ட அப்பாவிகளை மட்டுமல்லாமல், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஒரு மிகப்பெரிய பேரழிவையும், அதன்மூலம் வெடிக்கவிருந்த மூன்றாம் உலகப்போர் போன்ற அபாயத்தையும் இந்திய விமானி கேப்டன் ஸ்மித் மச்சார் தனது ஒற்றைத் துணிச்சலால் தடுத்து நிறுத்தியுள்ளதாக சர்வதேச அரசியல் வல்லுநர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

துபாயில் இருந்து டெல் அவிவ் சென்ற போயிங் விமானத்தின் காக்பிட்டில் கேப்டன் ஸ்மித் மச்சார் பயணித்தபோது, 



சக ஓமனி துணை விமானி திடீரென கத்தியால் அவரைக் குத்தித் தாக்கியுள்ளார். அவரது திட்டம் வெறும் விமானத்தைக் கடத்துவது மட்டுமல்ல, அமெரிக்காவில் 2001ம் ஆண்டு செப்டம்பர் 11ல் நடந்த இரட்டை கோபுரத் தாக்குதலைப் போன்று









(9/11), விமானத்தை இஸ்ரேலின் முக்கிய கட்டடத்தின் மீதோ அல்லது மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள நகர்ப்புறத்திலோ மோதி தற்கொலைப்படைத் தாக்குதல் நடத்துவதுதான் என்று கூறப்படுகிறது.

ஏற்கனவே காசா, ஈரான், லெபனான் போன்ற பகுதிகளைச் சுற்றி இஸ்ரேலுக்கும் அதன் அண்டை நாடுகளுக்கும் இடையே கடுமையான பதற்றமும் போர்ப் பதற்றமும் நீடித்து வருகிறது. இத்தகைய சூழலில், அரபு நாட்டிலிருந்து புறப்பட்ட ஒரு விமானம், இஸ்ரேல் மண்ணில் மோதி ஒரு தற்கொலைப்படைத் தாக்குதலை நடத்தியிருந்தால் என்ன ஆகியிருக்கும்?

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, "அவர் தடுத்தது ஒரு சாதாரண விபத்தை அல்ல, கணிக்க முடியாத ஒரு மாபெரும் பேரிடரை" என்று தெரிவித்துள்ளார். அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பும் இந்த வீரச் செயலை வியந்து பாராட்டியுள்ளார்.

வானில் சில விநாடிகளில் எடுக்கப்பட்ட அந்த ஒரு துணிச்சலான முடிவு, 174 மனித உயிர்களைக் காப்பாற்றியதோடு நின்றுவிடவில்லை. உலகப் பொருளாதாரத்தையும் சர்வதேச அமைதியையும் உலுக்கவிருந்த மிகப்பெரிய புவிசார் அரசியல் சூறாவளியையே தடுத்து நிறுத்தியுள்ளது. தனது இறுதி மூச்சு வரை போராடி தேச எல்லைகளைத் தாண்டி உலக அமைதியைக் காத்த இந்தியக் கேப்டன் ஸ்மித் மச்சாரை சர்வதேச சமூகம் இன்று கொண்டாடி வருகிறது.

# கடலுக்கு அடியில் பூம்புகார் நகரம்!

## – ஆய்வில் தகவல்



மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகாரில் கடந்த இரண்டு வாரங்களுக்கும் மேலாக நடைபெற்று வந்த தமிழ்நாடு தொல்லியல் துறையின் மூன்றாம் கட்ட கடலடி அகழாய்வு செப்டம்பர் 22ஆம் தேதி நிறைவடைந்துள்ளது.

தமிழ்நாட்டின் பள்ளிக்கல்வி மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் ராஜ்மோகனால் கடந்த செப்டம்பர் 6ஆம் தேதி தொடங்கப்பட்ட இந்த அகழாய்வில், 250க்கும் மேற்பட்ட தொல்லியல் பொருட்கள் பூம்புகார் கடல் பகுதியில் இருந்து கிடைத்துள்ளதாக தொல்லியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழர்கள் மற்றும் தமிழ்நாட்டின் வரலாறு குறித்த விவாதங்களில் கீழடி போன்றே பண்டைய துறைமுக நகரமான பூம்புகாரும் இடம்பெறும்.

இந்தப் பூம்புகார் கி.மு. நான்காம் நூற்றாண்டில் செழிப்பான ஒரு துறைமுக நகரமாக இருந்தது என்றும், ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் சோழர்களின் தலைநகரமாக இது விளங்கியது என்றும் தமிழ்நாடு தொல்லியல் துறை தெரிவிக்கிறது.

அகநானூறு, புறநானூறு, பட்டினப்பாலை போன்ற சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற காப்பியங்களிலும் பண்டைய காவிரிப்பூம்பட்டினமாக அறியப்படும் பூம்புகார் பற்றி பல விரிவான குறிப்புகள் உள்ளன. இங்கு உயரமான கட்டடங்களும், வைணவ, சைவ, பௌத்த, சமணக் கோயில்களும் இருந்ததாக சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.



வடமலைப் பிறந்த மணியும், பொன்னும் குடமலைப் பிறந்த ஆரமும், அகிலும், தென்கடல் முத்தும் குணகடற்றுகிரும், கங்கைவாரியும், காவிரிப்பயனும், ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும் அரியவும், பெரியவும், நெரியஈண்டி வளர்தலை மயங்கிய நனந்தலை மதுரு...'

பூம்புகாரில் பல நாட்டுப் பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டு இருந்ததாக பட்டினப்பாலை இவ்வாறு விவரிக்கிறது.

இரண்டு வாரங்களுக்கும் மேலாக நடைபெற்ற இந்த மூன்றாம் கட்ட கடலடி அகழாய்வில் 250க்கும் மேற்பட்ட தொல்லியல் பொருட்கள் கிடைத்துள்ளதாகக் கூறுகிறார், தொல்லியல் ஆய்வாளர் யதீஸ் குமார்.

"இதுவரைக்கும் இந்த மாதிரியான கடல் அகழாய்வுகளில் செராமிக்ஸ் (மட்பாண்டங்கள்) கிடைக்கவில்லை. இம்முறை நமக்கு 250க்கும் மேற்பட்ட செராமிக் மட்பாண்ட துண்டுகள் கிடைத்துள்ளன. இதுதான் நமக்கு மிகப் பெரிய ஆதாரம். பெரிய பெரிய சேமிப்பு ஜாடிகளின் பாகங்கள் கிடைத்துள்ளன. வணிகக் கப்பல்களில் இவை அதிகம் பயன்படுத்தப்படும். இவற்றின் காலம் இன்னும் கண்டறியப்படவில்லை" என்கிறார் அவர். "இந்தப் பொருட்களை விரிவாக ஆய்வு செய்தால் என்ன மாதிரியான வணிகங்கள் இங்கு நடைபெற்றன என்பது தெரியவரும்!

# ஏழைக்கு உதவாத செல்வம், திருமணமாகாத பெண்ணுக்கு சமம்!

## – திருக்குறளை மேற்கோள்காட்டி புலவர் த.கு கருணாநிதி தரும் விளக்கம்!



**ஒ**ரு குறள் ஒரு விளக்கம்!

வள்ளுவர் காலத்திலேயே இல்லறம் ஏற்காமல் முது கன்னியர் இருந்தனர்.

அதுவும் அழகிய நலங்களை எல்லாம் பெற்றவளாகவும் திருமணம் ஆகாதவளாகவும் தனியளாகவும் மூத்தவளாகவும் பெண் காட்சி தந்திருக்கிறாள்.

ஒரு வேளை வரதட்சணைக் கொடுமையாலோ, திருமணம் செய்து கொடுக்க ஆளின்மையாலோ,

பெண்ணுக்கேற்ற பிள்ளை கிடைக்காமையாலோ, தனித்து வாழப் பெண்ணே விரும்பியமையாலோ, தான் என்ற எண்ணத்தினாலோ, இதுபோல் பலவேறு காரணத்தினாலோ இது நிகழ்ந்திருக்க வாய்ப்புண்டு.

திருவள்ளுவப் பெரியார் இதனைப் பெரிது படுத்தவில்லை. ஏழைகளுக்கு உதவாத செல்வம் குறித்துச் சொல்ல வந்தவர் இப்படி ஓர் உவமையைப் பயன்படுத்துகிறார்.

"அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம், மிகநலம் பெற்றாள் தமியள்மூத் தற்று"என நன்றியில் செல்வம் அதிகாரத்தில் ஆயிரத்தேழாவது குறளாகப் பாடுகிறார்.

பொருள்: ஏழைகளின் துன்பம் போக்கிடப் பயன்படுத்தாதவனின் செல்வம் மிகுந்த அழகைப் பெற்ற பெண்ணணங்கு ஒருத்தி யாரையும் கணவனாய்க் கொள்ளாது தனியாக வயது மூப்படைந்து போனதற்குச் சமம் என்கிறார். செல்வத்தை ஏழைகள் துய்க்க வேண்டும். பெண்ணை ஆடவர் துய்க்க வேண்டும்.

ஏழைகளுக்கு உதவாத செல்வத்தால் ஒரு பயனுமில்லை.ஆடவன் துய்க்காத அணங்கால் பயனில்லை. என்ன நாகரிகம் பாருங்கள்.

பணம் சேர்க்கிறான், சேர்க்கிறான், சேர்க்கிறான். பயன் ஒன்றும் இல்லை. மிக அழகிய நலங்களை எல்லாம் பெற்றிருக்கிறாள். ஆனால் துணையில்லாமல் தனியாக இருக்கிறாள். வயதும் கடந்து போகிறாள். யாருக்கும் பயனில்லை. இவ்வாறு செல்வம் சேர்ப்பது அவரவர் விருப்பம்.

அழகைப் பெற்றிருந்தும் தனியாக வாழ்ந்து மூப்படைவதும் அவரவர் விருப்பம்.

ஏழைகளுக்குச் செலவு செய் என யாரையும் கட்டாயப்படுத்த முடியாது. உரிய காலத்தே திருமணம் செய் என யாரையும் கட்டாயப் படுத்த முடியாது.

அவனாகத் திருந்தி ஏழைகளுக்குச் செலவு செய்ய வேண்டும்.பெண்ணே திருந்தி திருமணம் செய்து கொள்ள வேண்டும் உரிய வயதில்.முதிர் கன்னி ஆதல் கூடாது.

பயன்தராப் பணமும் கூடாது. ஏழைகளுக்கு உதவி செய்யுங்கள். ஏந்திழைகள் உரிய வயதில் திருமணம் செய்யுங்கள். உவமை நாகரிகத்தோடு அக்கால இயல்பையும் தொட்டுக் காட்டுகிறார் வள்ளுவர்.

குட்டும் வைக்கிறார் கஞ்சனுக்கும் முதிர் கன்னிக்கும்!

# இரவு சாப்பிட்ட உடனே தூங்காதீங்க!



இரவு உணவுக்குப் பின் 10 நிமிஷம் நடங்க.. அப்புறம் உடலில் நடக்கும் அதிசயம் பாருங்க

இரவு நேரத்தில் பலர் சாப்பிட்ட உடனேயே படுக்கைக்குச் செல்கிறார்கள். கையில் செல்போனை எடுத்துக்கொண்டு பிடித்த வெப் சீரிஸ், ரீல்ஸ் பார்த்து நேரத்தை செலவிடுகிறார்கள்.

சிறிது நேரம் பொழுதுபோக்கிய பிறகு தூங்குகிறார்கள். இப்போது இது பலரின் தினசரி வழக்கமாகிவிட்டது. ஆனால் அத்தகையவர்கள் தங்கள் நோய்களைத் தாங்களே வரவழைக்கிறார்கள் என்று நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள். இரண்டாவது மூளை என்று அழைக்கப்படும் குடலுக்கு கடுமையான துரோகம் செய்கிறார்கள் என்று கூறுகிறார்கள். இதுபோன்ற வாழ்க்கை முறை காரணமாகவே இன்று மூன்று பேரில் ஒருவர் வாயு, வயிறு உப்புசம், அசிடிட்டி, மலச்சிக்கல் ஆகியவற்றால் பாதிக்கப்படுகிறார்கள்.

இந்த குடல் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் ஒரு அற்புதமான, மிக எளிதான வாழ்க்கை முறை உள்ளது. இதற்காக நீங்கள் ஒரு ரூபாய் கூட செலவழிக்க வேண்டியதில்லை. பெரிய உடற்பயிற்சிகள் செய்ய வேண்டிய அவசியமில்லை. இரவு உணவை முடித்த பிறகு பத்து முதல் 15 நிமிடங்கள் நடந்தால் போதும், உங்கள் குடல் ஆரோக்கியமாக இருக்கும். உங்கள் வீட்டிலோ அல்லது வெளியிலோ அமைதியாக நடந்தால் போதும். மருத்துவ மொழியில் இதை போஸ்ட் பிராண்டியல் வாக்கிங் என்று அழைக்கிறார்கள். இரவு சாப்பிட்ட பிறகு நீங்கள் வைக்கும் ஒவ்வொரு அடியும் உங்கள் செரிமான அமைப்பை மேம்படுத்தும்.



நாம் உணவு சாப்பிட்ட பிறகு, அது இரைப்பையிலிருந்து சிறுகுடலுக்குச் செல்லும் செயல்முறையை மருத்துவ மொழியில் இரைப்பை காலி செய்தல் (Gastric Emptying) என்று அழைக்கிறார்கள். நீங்கள் சாப்பிட்ட உடனேயே உட்கார்ந்தாலும், படுத்தாலும் இந்த செயல்முறை சீராக நடைபெறாது. அதனால்தான் நீங்கள் சாப்பிட்ட உணவு ஆரம்ப நிலையிலேயே தங்கிவிடும். இதனால் உணவு புளித்துவிடும். இதன் காரணமாக வாயு உற்பத்தி ஆகும்.

சாப்பிட்ட பிறகு நடப்பதால் செரிமான மண்டலத்தின் தசைகள் மிகவும் சுறுசுறுப்பாகின்றன. இதனால் செரிமானப் பாதையின் அசைவுகள் வேகமாக நடைபெறுகின்றன. இதன் விளைவாக உணவு எளிதாக ஜீரணமாகிறது. நீங்கள் பத்து நிமிடங்கள் நடந்தாலும், அது 30 சதவீத வேலையை முடிக்கும்.

நீங்கள் சாப்பிட்ட பிறகு கார்போஹைட்ரேட்டுகள் குளுக்கோஸாக மாறி இரத்தத்தில் கலக்கின்றன. இதனால் சர்க்கரை அளவு வேகமாக அதிகரிக்கிறது. இதை கட்டுப்படுத்த கணையம் அதிக அளவில்



இன்சுலினை வெளியிட வேண்டும். இப்படி தொடர்ந்து செய்வதால் அதன் செயல்பாடு மந்தமாகிறது. இதனால் டைப் 2 நீரிழிவு நோய்க்கு வழிவகுக்கிறது.

ஆனால் நீங்கள் நடப்பதால் கணையத்தின் மீது சுமை குறைகிறது. நீங்கள் சாப்பிட்ட கார்போஹைட்ரேட்டில் உள்ள குளுக்கோஸை தசைகள் எடுத்துக்கொள்கின்றன. அவற்றை சக்தியாக மாற்றுகின்றன. இது நீங்கள் சாப்பிட்ட பிறகு நடக்கும்போது நடக்கிறது.

ஸ்போர்ட்ஸ் மெடிசின் ஜர்னலில் எழுதப்பட்டபடி, நீங்கள் சாப்பிட்ட பிறகு ஐந்து நிமிடங்கள் நடந்தாலும் சர்க்கரை அளவு கணிசமாகக் குறையும் என்று தெரியவந்துள்ளது. அப்படி பத்து முதல் 15 நிமிடங்கள் நடந்தால் 22 சதவீதம் வரை குளுக்கோஸ் அளவுகளை கட்டுப்படுத்தலாம் என்று கூறுகிறார்கள்.

சாப்பிட்ட பிறகு நெஞ்செரிச்சல் இருப்பதாக பலர் கூறுவார்கள் அல்லது புளித்த ஏப்பம் வருவதாகச் சொல்வார்கள். இதைத்தான் ஆசிட் ரிஃப்ளக்ஸ் என்று அழைக்கிறார்கள். சாப்பிட்ட உடனேயே படுப்பதால் ஈர்ப்பு விசை இல்லாததால், இரைப்பையில் உள்ள ஹைட்ரோகுளோரிக் அமிலம் எளிதாக உணவுக்குழாய்க்குள் நுழைகிறது. இதனால் உள் அடுக்குகளுக்கு சேதம் ஏற்பட்டு எரிச்சலை ஏற்படுத்துகிறது. அதனால்தான் இரவு நேரத்தில் சாப்பிட்ட பிறகு நடப்பதால் அமிலம் மேலே வரும் வாய்ப்பு இல்லை. மேலும், உங்கள் உமிழ்நீர் கீழே செல்கிறது. இதனால் உணவுக்குழாய்க்குள் அமிலங்கள் வந்தாலும் அவற்றை குளிர்விக்கிறது. இதனால் எந்த மருந்துகளும் தேவையில்லாமல் வயிறு உப்புசம், அசிடிட்டி குறைகிறது.

நீங்கள் ஆரோக்கியமாக இருக்கவும், மனதளவில் வலிமையாக இருக்கவும் குடல் ஆரோக்கியம் மிகவும் அவசியம். குடல் நுண்ணுயிரியில் உள்ள நல்ல பாக்டீரியாக்கள் உங்களுக்கு நன்மை பயக்கும். நீங்கள் தினமும் இரவு சாப்பிட்ட பிறகு நடப்பதால் அந்த நல்ல பாக்டீரியாக்கள் பெருகும். இல்லையெனில் அதன் சதவீதம் குறைந்து நீங்கள் நோய்வாய்ப்படுவீர்கள்.

இரவு நேரங்களில் வளர்சிதை மாற்ற விகிதம் மிகக் குறைவாக இருக்கும். அதில் நீங்கள் முழுமையாக சாப்பிட்ட பிறகு படுத்தால் அது மேலும் மந்தமாகிவிடும். இதனால் கலோரிகள் அனைத்தும் கொழுப்பாக மாறிவிடும். இதன் காரணமாக தொப்பை கொழுப்பு வரும். நீங்கள் இரவு சாப்பிட்ட பிறகு 15 நிமிடங்கள் நடப்பதால் வளர்சிதை மாற்றம் மீண்டும் தூண்டப்படுகிறது. இதனால் கலோரிகள் எரிக்கப்பட உதவுகிறது. நல்ல கொழுப்பை அதிகரிக்க உதவுகிறது.

பலர் சாப்பிட்ட பிறகு விரைவாக ஜீரணமாக வேண்டும் அல்லது மேலும் ஆரோக்கியத்திற்காக ஓடுவார்கள். அல்லது உடற்பயிற்சிகள் செய்வார்கள். ஆனால் இது மிகவும் ஆபத்தானது. நீங்கள் உணவு உட்கொண்ட பிறகு இரத்த ஓட்ட அமைப்பு நீங்கள் உட்கொண்ட உணவை ஜீரணிக்கும் வேலையில் முழுமையாக இருக்கும். ஆனால் அதை திசைதிருப்பி நீங்கள் ஓடினால், ஜீரணிக்கும் செயல்முறையை ஒதுக்கி வைத்துவிட்டு, உங்களுக்கு ஓடும் சக்தியை அளிப்பதில் கவனம் செலுத்தும். இதனால் செரிமானம் நின்றுவிடும். இதன் காரணமாக வயிற்று வலி வரும். சில சமயங்களில் வாந்தி வரும்.

அதனால்தான் சாப்பிட்ட பிறகு பத்து முதல் இருபது நிமிடங்கள் நடந்தால் போதும். இதை தினமும் காலை நடப்பது போல இல்லாமல், நிதானமாக, உலாவுவது போல நடந்தால் போதும். சாப்பிட்ட ஐந்து முதல் 10 நிமிடங்கள் நடப்பது நல்லது.

இரவு உணவுக்குப் பிறகு நடப்பது உங்கள் குடல் ஆரோக்கியத்திற்கு நல்லது. ஆனால் ஓடுவது, கனமான எடைகளை தூக்குவது, விரைவான நடைபயிற்சி செய்வது நல்லதல்ல.

# 47 குழந்தைகளை பாதுகாத்து பராமரிக்கும் 'சாலமன்' அப்பா!



திருமணமாகி எட்டு ஆண்டுகள் குழந்தையில்லாமல் இருந்த சாலமன், குழந்தை பிறந்த பின்னர் இன்று 47 குழந்தைகளுக்கு அப்பா!

சாலமன் ராஜ், ஃபெல்வியா சாந்தி இருவருக்கும் 1992ஆம் ஆண்டு திருமணம் நடந்தது. மகிழ்ச்சிகரமாக போய்க்கொண்டிருந்தது வாழ்க்கை. திருமணம் முடிந்த முதல் ஆண்டே குழந்தை பிறக்கும் என்று இருவரும் ஆசையாக இருந்தார்கள். ஏமாற்றமே மிஞ்சியது. அடுத்த ஆண்டும் காத்திருந்தார்கள். இப்போதும் அதற்கான அதிர்ஷ்டம் இவர்களுக்குக் கிட்டவில்லை. மருத்துவர்களை நாடினார்கள்."குழந்தை பிறந்துவிடும்"என்ற நம்பிக்கையை தந்தார்கள் மருத்துவர்கள். அந்த ஆண்டும் குழந்தை உருவாகவில்லை.

இப்படியே ஒவ்வொரு ஆண்டும் எதிர்பார்ப்பதும், ஏமாற்றம் கிடைப்பதுமாக எட்டு ஆண்டுகள் கழிந்தன. அலோபதி மருத்துவம் முதல் சித்த வைத்தியம் வரை எல்லாம் பார்த்தாயிற்று. இரண்டுபேர் உடல்களையும் பரிசோதனையும் செய்தாயிற்று. குழந்தை கண்டிப்பாக பிறக்கும் என்ற நம்பிக்கையை எல்லா மருத்துவர்களும் கொடுத்தார்களே தவிர குழந்தை உருவாவதற்கான அறிகுறிகளே தென்படவில்லை. இருவருமே ஒருவர் முகத்தை ஒருவர் துக்கத்தோடு பார்த்துக்கொண்டார்கள்.

2000ஆம் ஆண்டின் அந்த இரவு அவர்களை ஒன்றிணைக்கும் இரவாக மட்டுமல்லாமல் மனதளவிலும் ஒரு முடிவுக்கு வரும் இரவாகவும் அமைந்தது. "அன்பும் ஆதரவும் தேவைப்படும் குழந்தை ஒன்றை நாம் தத்தெடுத்துக் கொண்டால் என்ன?"இருவருக்குமே ஒரே நேரத்தில் இந்த யோசனை தோன்றியது.

மறுநாள் இருவரும் அனாதை இல்லம் ஒன்றிற்குச் சென்று குழந்தை ஒன்றைப் பார்த்து தத்தெடுப்பது என்று பேசியபடி உறங்கிப் போனார்கள்.

விடிந்தது. அவர்கள் வாழ்விலும் விடியல் ஏற்பட்டது. சாந்தி காலையிலேயே மயக்கத்தோடு வாந்தி எடுக்க ஆரம்பித்தார். அனாதை இல்லம் செல்ல எண்ணியவர்கள் அந்த முடிவை மாற்றிக்கொண்டு இப்போது சென்ற இடமோ மருத்துவமனை. சாந்தியைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் கர்ப்பம் தரித்திருப்பதை உறுதி செய்தார்கள். தம்பதிகள் எல்லையில்லா மகிழ்ச்சியில் ஆழ்ந்தார்கள். அந்த ஆண்டே இவர்களுக்குக் குழந்தை பிறந்தது.

சாலமன் ஒரு குழந்தைக்கு அப்பா ஆகிய போதிலும், அவர் மனதில் ஏதோ ஒரு குறை இருந்து கொண்டே இருப்பது போல் தோன்றியது. குழந்தையை தத்தெடுக்கவேண்டும் என்கிற முதல் நாள் இரவின் பேச்சு இறைவனுக்குக் கேட்டு இருக்க வேண்டும்.

அதனால்தான் மறுநாளே சாந்திக்குக் குழந்தை உண்டாகியது போலும் என்று நம்பிய சாலமன் குழந்தை ஒன்றை தத்து எடுப்பது என்ற முடிவில் இருந்து மாறக்கூடாது என முடிவுசெய்தார். தன் முடிவை மனைவி சாந்தியிடம் தெரிவித்தார். சாந்தியும் மறுப்பேதும் சொல்லவில்லை. சாலமனின் விருப்பம் சற்றும் குறையவில்லை.

அரசு சாரா நிறுவனம் ஒன்றிற்கு சாலமன் சென்றிருந்தார். இவர் போன நேரம் சில தன்னார்வலர்கள் பூப் போன்ற ஒரு குழந்தையை எடுத்துக்கொண்டு அங்கே வந்திருந்தார்கள். பொக்கை வாய் காட்டி கைகளை நீட்டிச் சிரித்த அந்தக் குழந்தை சாலமனை மிகவும் கவர்ந்தது."யார் இந்தக் குழந்தை? எங்கிருந்து எடுத்து வருகிறீர்கள்?" என்று அவர்களைக் கேட்டார் சாலமன். "இந்தக் குழந்தையின் தாய், தந்தை இருவரும் எய்ட்ஸ் நோய் பாதித்து உயிரிழந்து விட்டார்கள். எச்ஐவி பாதித்த இந்தக் குழந்தையின் பெயர் அற்புதராஜ். உறவினர்கள் எவரும் இந்தக் குழந்தையை வளர்க்க முன்வரவில்லை.

தற்சமயம் இந்தக் குழந்தை இருக்க வீடு கூட இல்லாமல்தான் இருக்கிறது. எனவேதான் இங்கே கொண்டு வந்து விட்டோம்"என்றார்கள் தன்னார்வலர்கள். சாலமன், "இந்தக் குழந்தையை நான் தத்தெடுத்துக் கொள்கிறேன்"என்று சொல்லி கைகளில் குழந்தையை ஏந்திக் கொண்டார். கைகளை நீட்டி அவரை கெட்டியாகப் பிடித்துக் கொண்ட அந்தக் குழந்தை இப்போதும் கள்ளமில்லாமல் சிரித்தது. குழந்தையை வீட்டுக்குக் கொண்டு வந்த சாலமனிடமிருந்து குழந்தையை வாங்கிய சாந்தி "நம்ம வீட்டுக்கு ராசா வந்திருக்காரு" என்று அகமகிழ்ந்தார்.




குழந்தை அற்புதராஜின் சோகக் கதையைக் கேட்ட சாலமன் மறுநாளும் தன்னையறியாமல் அந்தத் தொண்டு நிறுவனத்திற்குச் சென்று சேர்ந்தார். இன்றும் தன்னார்வலர்கள் ஹெச்ஐவி பாதித்த ஒரு சிறுமியை எங்கிருந்தோ கொண்டு வந்திருந்தார்கள். சாலமன் அந்தக் குழந்தையையும் தத்தெடுத்துக் கொண்டார். இப்போது சாலமன், சாந்தி வீட்டில் மூன்று குழந்தைகள் ஒன்றாக வளரத் துவங்கினார்கள்.

ஹெச்ஐவி பாதிக்கப்பட்ட குழந்தைகளை சாலமன் தத்தெடுத்தத் தகவல் காற்று வாக்கில் எங்கும் பரவத் தொடங்கியது. கொஞ்ச நாட்களில் ஹெச்ஐவி பாதித்த அனாதையாக ஆக்கப்பட்ட இரண்டு குழந்தைகளை தூக்கிக்கொண்டு ஒருவர் அவர்கள் வீட்டுக்கே வந்து விட்டார். இந்தக் குழந்தைகளையும் தத்தெடுத்துக் கொள்ளுங்கள் என்று சாலமனை வேண்டினார்.யாரோ செய்த பாவத்துக்கு அனாதையாக்கப்பட்ட அந்தக் குழந்தைகளைப் பார்த்து மனம் கலங்கிய சாலமன் அவர்களையும் தன் குழந்தைகளாக ஏற்றுக்கொண்டார்.

அப்போதுதான் இந்த மாதிரி பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கான தங்குமிடத்தைத் தொடங்கலாம் என சாலமன் தீர்மானித்தார். 52 வயதான சாலமன் 'ஷெல்டர் ட்ரஸ்ட்' என்கிற பெயரில் சென்னையில் ஒரு தன்னார்வத் தொண்டு நிறுவனத்தை நிறுவினார். இதில் இப்போது ஹெச்ஐவி பாதிக்கப்பட்ட 47 குழந்தைகள் உள்ளனர். சாலமனை 'அப்பா' என்றே அவர்கள் அனைவரும் அழைக்கின்றனர்.

சாலமன் ஹைதராபாத்தில் பிறந்து வளர்ந்தவர். இறையியல் ஆய்விற்காக சென்னைக்கு மாற்றலாகியுள்ளார். இருபதாண்டுகளுக்கும் மேலாக சென்னையில் வசித்து வருகிறார். தங்குமிடத்தில் உள்ள இந்த 47 குழந்தைகளுக்கு ஆதரவளிக்க, பராமரிக்க மூன்று வெவ்வேறு பணிகளில் ஈடுபட்டுள்ளார். இறையியல் கல்லூரி ஆசிரியர், அரசு சாரா நிறுவனம் ஆகிய ரைட் நவ் ஃபவுண்டேசன் மற்றும் மகளிர் மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி மையம் மூன்றிலும் பணியாற்றுகிறார்.

"என்னுடைய நாள் காலை 6 மணிக்குத்

தொடங்குகிறது. மூன்று வெவ்வேறு இடங்களில் பணிபுரிகிறேன். செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் கல்லூரி ஒன்றில் வகுப்பெடுப்பதால் காலை 8 மணிக்கு அங்கு சென்றுவிடுவேன். 10.30 மணிக்கு அங்கு வேலையை முடித்துக்கொண்டு 2 அலுவலகங்களில் ஒன்றிற்குச் செல்வேன். மாலையில் தங்குமிடத்திற்குச் சென்று குழந்தைகளுடன் விளையாடுவேன். 7.30 மணியளவில் என் வீட்டைச் சென்றடைவேன். வகுப்பெடுக்கச் செல்லாத நாட்களில் காலை ஏழு மணிக்கே தங்குமிடத்திற்குச் சென்று குழந்தைகளுடன் சிறிது நேரம் செலவிடுவேன். அதன் பிறகு இரண்டு அலுவலகங்களில் ஒன்றிற்குச் செல்வேன். மாலை நேரங்களில் ஆவணங்கள் தொடர்புடைய எழுத்துப் பணிகளில் ஈடுபடுவேன். இதுவே எனது தினசரி அட்டவணை" என சாலமன் குறிப்பிட்டார்.

எய்ட்ஸ் தொடர்பாக மக்களிடையே நிலவும் அறியாமையை நினைத்து மனம் வருந்திய சாலமன், தனது பணி மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்த விரும்புகிறார். "அந்த நாட்களில் ஹெச்ஐவி குறித்த போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தால் ஹெச்ஐவி பாதிக்கப்பட்ட குழந்தைகள் பற்றி நான் பேசியபோது மக்கள் தயக்கம் காட்டினர்," என்றார். இந்தக் குழந்தைகள் மீது சாலமன் காட்டும் அக்கறையை நெருங்கிய நண்பர்களும் சொந்த பந்தங்களும்கூட புரிந்து கொள்ளவில்லை. "ஹெச்ஐவி தொடர்பான அறியாமை காரணமாக என்னுடைய உறவினர்களும் நண்பர்களும்கூட என்னிடம் நெருங்குவதில்லை. கடுமையான விமர்சனங்களையும் எதிர்மறையான கருத்துக்களையும் முன்வைத்தனர். நான் இந்தக் குழந்தைகளைப் பராமரிக்க பலர் எனக்கு ஆதரவளிக்கவில்லை," என்று நினைவுகூர்ந்தார்.

இருப்பினும் சாலமன் சற்றும் மனம் தளர்ந்து போகாமல் குழந்தைகளைப் பராமரிக்கும்



பணியில் தானே ஈடுபடத் தொடங்கினார். "முதலில் குழந்தைகளுக்கான தங்குமிடத்தை என்னுடைய வீட்டிலேயே என் குடும்பத்துடனேயே அமைத்தேன். அனைவரும் ஒன்றாகவே வசித்தோம். மூன்று குழந்தைகளுக்கு மேல் எண்ணிக்கை அதிகரித்ததும் வீட்டில் இடவசதி போதுமானதாக இல்லை. எனவே வேறொரு இடத்திற்கு குழந்தைகளை மாற்றினேன்," என சாலமன் விவரித்தார்.

2003ஆம் ஆண்டு 'ஷெல்டர் ட்ரஸ்ட்' என்ற இந்தக் குழந்தைகளுக்கான இல்லத்தைக் கட்டுவதற்காக தனது அரசுசாரா நிறுவனத்தை, சாலமன் குழந்தை நல அமைப்புடன் பதிவு செய்யவேண்டியிருந்தது. ஷெல்டர் ட்ரஸ்ட் கட்டுவதற்குத் தன்னுடைய சொந்தப் பணத்தை செலவிட்டார். சுமார் எட்டு குழந்தைகளுக்கான செலவை தானே ஏற்றுக்கொண்டார். அதன் பிறகு நண்பர்கள், உறவினர்களிடமிருந்தும் ரோட்டரி கிளப் சென்னை, லயன்ஸ் கிளப் உள்ளிட்ட நிறுவனங்களிடமிருந்தும் நிதியுதவி பெறப்பட்டது.

அடுத்தபடியாக ஊழியர்களைப் பணியிலமர்த்துவது மிகப்பெரிய சவாலாக இருந்தது. "தங்குமிடம் கட்டுவதற்கு ஒரு இல்லத்தைக் கண்டறிந்தபிறகு ஊழியர்களை நியமிப்பது மிகப்பெரிய பணியாக இருந்தது. ஹெச்ஐவி பாதிக்கப்பட்ட குழந்தைகளுடன் பணிபுரிய யாரும் முன்வரவில்லை," என்று சாலமன் தெரிவித்தார். அதன்பிறகு ஹெச்ஐவி பாதிக்கப்பட்ட நபர்களையே பணியிலமர்த்தத் தீர்மானித்தார். வெவ்வேறு மருத்துவமனைகளுக்கும் என்ஜிஓக்களுக்கும் தகவல் அனுப்பினார். பின்னர் அவரது என்ஜிஓ மற்றும் குழந்தைகளை ஆதரிக்கும் குழுவை ஒருங்கிணைத்தார். ஷெல்டர் ட்ரஸ்ட் குழுவில் தற்போது 12 ஊழியர்கள் முழுநேரமாகப் பணியாற்றுகின்றனர். இவர்களும் எச்ஐவி பாதிக்கப்பட்டவர்கள். இவர்கள் இந்த வளாகத்திலேயே வசிக்கின்றனர்.

இங்கு பராமரிக்கப்படும் குழந்தைகளுக்கு அவர்களைப் பற்றிய உண்மை நிலவரம் மறைக்காமல் தெரிவிக்கப்படுகிறது. "குழந்தைகளுக்கு பத்து வயதாகும்போது ஹெச்ஐவி பாசிடிவ் குறித்த உண்மையை புரியவைக்கிறோம். அவர்கள் ஏன் இங்கு வசிக்கிறார்கள், என்ன பிரச்னைகளைச் சந்திக்கிறார்கள், பள்ளிக்குச் செல்லும்போது எப்படித் தங்களைத் தற்காத்துக்கொள்வது, சூழல்களுக்கும் சமூகத்திற்கும் எப்படி எதிர்வினையாற்றுவது உள்ளிட்டவற்றில் பயிற்சியளிக்கிறோம். தொடர்ந்து மருந்து எடுத்துக்கொள்வதன் அவசியத்தையும் அவர்களுக்கு உணர்த்துகிறோம்," என்றார் சாலமன்.



இன்று மூன்று முதல் பதினெட்டு வயது வரையிலும் உள்ள 47 குழந்தைகள் இவரது பராமரிப்பில் உள்ளனர். இவர்கள் தங்களுக்கு எச்ஐவி பாதிப்பு இருப்பதை அறிவார்கள். தங்களது வாழ்நாள் முழுவதும் மருந்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதையும் அறிந்துள்ளனர். இவர்கள் அனைவருமே ஆதரவற்றவர்கள் இல்லை. பெரும்பாலானோருக்கு பெற்றோர்களில் ஒருவர் மட்டும் உள்ளனர். இவர்கள் தனியாகக் குழந்தைகளைப் பராமரிக்க சிரமப்படுகின்றனர். "ஒவ்வொரு குழந்தைக்கும் குழந்தை நல அமைப்பு சார்பில் உரிமம் வழங்கப்படும். இதனால் குழந்தைகளுக்கு 18 வயதாகும் வரை எங்களது பராமரிப்பில் இருக்கலாம்," என்றார்.

இந்தத் தங்குமிடத்தைச் சேர்ந்த குழந்தைகள் அரசுப் பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர். இவர்களுக்கு 18 வயதான பிறகும் சாலமன் இவர்கள் மீது கவனம் செலுத்தி மேற்படிப்பிற்கு உதவி வருகிறார். சில குழந்தைகள் மீண்டும் தங்குமிடத்திற்குத் திரும்பி ஊழியர்களாகப் பணியாற்றியுள்ளனர். "இந்தக் குழந்தைகள் அனைவரும் என்னை 'அப்பா' என்று கூப்பிடும்போது எனக்கு அளவில்லா மகிழ்ச்சி ஏற்படுகிறது," என்றார் சாலமன்.

"ஹோம்கேர் சப்போர்ட் பிராஜெக்ட்" என்ற திட்டத்தை செயல்படுத்த விரும்புகிறார். "குழந்தைகளுக்கு அவர்களது வீட்டிலேயே உதவுவது தொடர்பாக பணியாற்றி வருகிறோம். இல்லம் அல்லது தங்குமிடங்களில் பராமரிப்பு வழங்கப்படுவதை வேறு வழியில்லாத சூழல்களில் மட்டுமே மேற்கொள்கிறோம். குழந்தைகள் அவர்களது குடும்பங்களுடனேயே வசிக்கவேண்டும் என்பதே எங்களது விருப்பம். ஏழ்மை காரணமாகவும் போதிய விழிப்புணர்வு இல்லாத காரணத்தினாலும் இவர்கள் எங்களைப் போன்றவர்களிடம் அனுப்பப்படுகின்றனர். நாங்கள் இந்தக் குழந்தைகளின் குடும்பங்களை அணுகி விழிப்புணர்வை ஏற்படுத்தி ஹெச்ஐவி பாதிக்கப்பட்ட குழந்தைகள் குறித்து எடுத்துரைக்கிறோம்," என்றார் சாலமன்.

வீட்டிலேயே குழந்தைகளைப் பராமரிக்கும் ஷெல்டர் ட்ரஸ்ட் முயற்சியில் முட்டை, ஒரு பழம், பால் பாக்கெட் உள்ளிட்ட ஊட்டச்சத்துப் பொருட்களை குழந்தைகளின் வீட்டிலேயே கொண்டு சேர்க்கப்படுகிறது. சில மாணவர்களுக்கு பைகள், பள்ளிக் கட்டணம், எழுதுபொருட்கள் உள்ளிட்ட பள்ளிக்குத் தேவையான பொருட்களும் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் தங்குமிடத்திற்கு வெளியே உள்ள சுமார் 60 குழந்தைகளுக்கு இந்நிறுவனம் தற்சமயம் உதவி வருகிறது.

தங்குமிடத்தில் உள்ள குழந்தைகளின் எதிர்காலம் குறித்து சாலமன் கூறும்போது, "மற்ற குழந்தைகளைப் போன்றே இந்தக் குழந்தைகளும் வளர்ந்து வீட்டுச் சூழலில் மகிழ்ச்சியுடன் வாழவேண்டும் என்பதே என்னுடைய கனவு. ஹெச்ஐவி மற்றும் எய்ட்ஸ் நோயாளிகளைக் குணப்படுத்தக்கூடிய மருந்து கண்டுபிடிக்கப்படவேண்டும் என்று விரும்புகிறேன். இந்தக் குழந்தைகளுக்கு நல்ல ஆரோக்கியத்துடன்கூடிய சிறப்பான எதிர்காலம் அமையவேண்டும்," என்றார் சாலமன்!

பேச...94444 55275

– மன்னை பாண்டியன்

# நான் கருப்பன் என்பதில் பெருமை கொள்கிறேன்

ஆசிரியர்கள் மாறுவார்கள்
பிள்ளைகள்
மாறுவார்கள்
ஆனால் என் இருப்பிடம்
அங்கேயே தான்

நான் கருப்பன் என எல்லோரும்
இரவில் ஒதுக்கி வைத்துச் சென்றாலும்
பயமில்லை
எனக்கு
வருத்தமுண்டு

வெள்ளைக்காரனின் கரத்தைத் தழுவுதலில்
அவ்வளவு
மகிழ்ச்சி தினசரி
ஆசிரியர் மூலம்

காவியங்களும்
ஓவியங்களும்,
கணிதச் சூத்திரங்களும்,
சாத்திரங்களும்,
சமன்பாடுகளும், அறிவியலும்,
ஆங்கிலமும்
பயிற்றுவிக்க
உதவிக்கரம்
நீட்டினேன்

ஒரு வருத்தமுண்டு
ஆசிரியர் சொன்னதால் வகுப்புத் தலைவர் வகுப்பில் பேசியவர்கள்
பெயரை என்னில்
பட்டியலிடும் போது கருத்துச் சுதந்திரம் பறி போகிறதே நம்மால் என்று

அஆ என்னில்
தொடங்கி எழுத்தாளன் ஆனீர் முதல்வர் ஆனீர்



அலுவலகம் சென்றீர்
விண்ணகம் ஏகினீர்
பொன்னகம் படைத்தீர்
என்ன ஆனாலும்
என்னை மட்டும் திரும்பிப் பாராதிருப்பீர்

முன்னர்
என்னில் வகுப்பு வருகை
பதிவிடுவீர்கள்
இப்போது இல்லை ஏன்?
என்னைப் பார்க்க வருபவர்கள்
எண்ணிக்கை
குறைந்ததே என்ற கவலையா?

இப்போது
கணினி வந்ததால் என்னை ஒதுக்க ஆரம்பித்து விட்டீர்களே,
அந்தக் கணினிக்கும்
வழி காட்டி விட்டவன் நான் தானே?

என்னை ஓரம் கட்டி ஒதுக்கிப் போட்டாலும் காத்திருக்கிறேன் ஒரு லிங்கன் வர மாட்டாரா என்று

அவரை யாவது
விட்டு விடுங்கள்
சுட்டு விடாதீர்கள்

– அம்ரா பாண்டியன்

# தவறவிடக்கூடாத 5 வாழ்க்கைப் பாடங்கள்!

ஒரு அனுபவம். அதிலிருந்து 5 வாழ்க்கைப் பாடங்கள். 29 நிமிடங்கள் நீடித்த ஒரு ஆழமான உரை.

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், ஐஐடி ரூர்க்கியில் ஆற்றிய உரை, மாணவர்களுக்கான பேச்சாக மட்டும் இல்லாமல், வாழ்க்கையில் முன்னேற நினைக்கும் ஒவ்வொருவருக்கும் பொருந்தக்கூடிய முக்கியமான பாடங்களை முன்வைக்கிறது.



**1. முதலில்... உங்கள் "வரைபடத்தை" சரியாகப் படியுங்கள்**

தனது இளமைக் காலத்தில் சிக்கிமில் பணியாற்றியபோது நடந்த ஒரு சம்பவத்தை அஜித் தோவல் நினைவுகூர்ந்தார். அப்போது அவருடன் பணியாற்றிய வயதான திபெத்திய ஷெர்பா (மலைவாழ் வழிகாட்டி) ஒருவர், "வரைபடத்தைச் சரியாகப் படிப்பதுதான் முக்கியம். சிலர் அதைச் சரியாகப் படிக்கிறார்கள்; சிலர் தவறாகப் படிக்கிறார்கள்" என்று கூறினார். அந்த வார்த்தையில் இருந்த வாழ்க்கைப் பாடத்தை தோவல் பின்னர் இப்படிப் புரிந்துகொண்டார். ஒரு வரைபடத்தைப் படிக்கும்போது முதலில் நாம் எங்கே இருக்கிறோம் என்பது தெரிந்திருக்க வேண்டும். அடுத்து எங்கே செல்ல வேண்டும் என்பது தெரிந்திருக்க வேண்டும். அந்த இரண்டும் தெரிந்தால்தான் அங்கே செல்வதற்கான பாதை எது என்பதையும் தீர்மானிக்க முடியும்.

வாழ்க்கையிலும் இதேதான். நாம் இப்போது எங்கே இருக்கிறோம்? எங்கே செல்ல விரும்புகிறோம்? அங்கே செல்வதற்கான பாதை என்ன? இந்த மூன்றுக்கும் தெளிவான பதில் இருந்தால்தான் அடுத்த அடியை சரியாக எடுக்க முடியும்.

**2. முடிவெடுப்பதற்கு முன்... சூழ்நிலையைப் புரிந்துகொள்ளுங்கள்**

நாம் எடுக்கும் முடிவு சரியா, தவறா என்பது சில நேரங்களில் பின்னர்தான் தெரியும். ஆனால் முடிவெடுப்பதற்கு முன் சூழ்நிலையைப் புரிந்துகொள்ளலாம். தகவல்களைச் சேகரிக்கலாம். அனுபவம் வாய்ந்தவர்களிடம் பேசலாம். பின்னர் முடிவெடுக்கலாம். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் எப்படி இருந்தீர்களோ, அப்படியே இப்போது இல்லை. எதிர்காலத்திலும் மாறுவீர்கள். தொடர்ந்து உங்களை மதிப்பீடு செய்து, மறுபரிசீலனை செய்துகொண்டே இருங்கள்.

**3. பெரிய இலக்குகளுக்கு... துணிச்சல் தேவை**

ராமாயணத்தில் ராமர் தேர்ந்தெடுத்த ஆபத்தான பாதையை எடுத்துக்காட்டாகக் கூறிய தோவல், பெரிய சாதனைகளுக்கு துணிச்சலான முனைப்பு (audacity) தேவைப்படுவதாகக் கூறினார். பாதுகாப்பான பாதையைத் தேர்ந்தெடுப்பது எப்போதும் தவறல்ல. ஆனால் பெரிய இலக்குகளை அடைய வேண்டுமென்றால், பெரிய சவால்களையும் வலிகளையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

**4. பெரிய ஆதாயங்களுக்கு... பெரிய சவால்களும் இருக்கும்**

வாழ்க்கையில் முன்னேறும்போது எல்லா பாதைகளும் எளிதாக இருக்காது. சில நேரங்களில் பெரிய இலக்கை நோக்கிச் செல்லும்போது, அதற்கேற்ற சவால்களையும் ஆபத்துகளையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். பெரிய ஆதாயங்களை விரும்பினால், பெரிய சவால்களையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

**5. உயரத்தை அடைந்தாலும்... மதிப்புகளை கைவிடாதீர்கள்**

லட்சியமும் துணிச்சலும் நம்மை முன்னேற்றலாம். ஆனால் அந்தப் பயணம் முழுவதும் பொறுப்பும் மதிப்புகளும் நம்முடன் இருக்க வேண்டும்.

இதைத்தான் தனது உரையின் முடிவில் அஜித் தோவல் வலியுறுத்தினார்: துணிச்சலாக இருங்கள். ஆனால் பொறுப்புடன் இருப்பதை மறந்துவிடாதீர்கள். உங்கள் மதிப்புகளை ஒருபோதும் கைவிடாதீர்கள்.



# தேசத்துக்காக உயிர் நீத்த 24வயது இளைஞர் பகத்சிங்

"**நா**ன் கேட்ட புத்தகத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்களா?" தூக்குக் கயிறு கழுத்தை இறுக்கும் கடைசி தருணத்தில் வழக்கறிஞரிடம் ஆவலாய் கேட்ட பகத்சிங்!

இந்திய விடுதலைக்காக ஒரு குடும்பமே சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் நாட்களைக் கழித்தது என்பது பகத்சிங்கின் குடும்பத்திற்கேப் பொருந்தும். பாட்டனார், தந்தை, சித்தப்பா மூவருமே சுதந்திரப் போராட்ட வீரர்கள்.

1907 செப்,28 இல் பகத்சிங் பிறந்தபோது சிறையில் இருந்தார் தந்தை கஹன்சிங். 'இந்தியா இந்தியருக்கு' என்று முதலில் முழங்கிய சுவாமி தயானந்த சரஸ்வதியின் வழிகாட்டுதலில் துவக்கப்பட்ட தயானந்த ஆங்கிலோ வேத பள்ளியில் படித்தார். பள்ளிப் பாடங்களை விட சமூக நிகழ்வுகளே அவரது உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது.

1919 ஜாலியன்வாலாபாக் படுகொலையை ஜெனரல் டயர் நிகழ்த்தினான்.இதை 12 வயது பகத்சிங் சென்று பார்த்து ஆத்திரமுற்றார்.மக்கள் செங்குருதி சிந்திய மண்ணை ஒரு பாட்டிலில் எடுத்து அடைத்து வைத்து வீட்டுக்குக் கொண்டு வந்திருந்தார். தன் படுக்கை பக்கத்தில் வைத்திருந்தவர், அதனை அடிக்கடி எடுத்துப் பார்த்து குமுறுவார்; நீண்ட நாட்கள் பார்த்துப் பொருமினார்.

தனது 14 ஆம் வயதில் நெஞ் சுறுதியுடன் தேசவிடுதலைப் போரில் தன்னை இணைத்துக் கொண்ட பகத்சிங், காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்தார். ஆங்கிலேய அரசு வழங்கிய பள்ளிப் பாடப் புத்தகங்களைக் கொளுத்தினார். விடுதலைப் போரில் முழுமையாக பங்கெடுக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஆழமாக இந்நிகழ்வு பகத்சிங்கின் மனதில் பதித்தது. ஒத்துழையாமை இயக்கத்தை காந்திஜி நிறுத்தியவுடன், காந்திய வழி போராட்டத்தில் நம்பிக்கையிழந்த பகத்சிங் இளம் புரட்சியாளர் இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார்.

அவரது வேகத்தைக் கண்ட பெற்றோர், திருமணம் செய்து வைக்க முடிவு செய்தனர். ஆனால் அது தனக்குத் தடையாக இருக்கும் எனக்கருதி மறுத்தார். நண்பர் சுகதேவ் மற்றும் ராஜகுரு உடன் இணைந்து 'நவஜவான் பாரத சபா'வை 1926இல் துவக்கினார்.

1919இல் சட்டத்தின் செயல்பாடுகளை ஆராய சைமன் கமிஷன் (வெள்ளையர் கமிஷன்) 1928இல் இந்தியா வந்தது. இதை எதிர்த்து நாடு முழுவதும் அறப்போராட்டங்கள் நடந்தன. லாகூர் ரயில் நிலையம் அருகே 'பஞ்சாப் சிங்கம்' லாலா லஜபதிராய் தலைமையில் ஊர்வலம் நடந்தது. காவல் கண்காணிப்பாளர் ஸ்காட் உத்தரவுப்படி தடியடி நடந்தது. இதில் காயமுற்ற லஜபதிராய் மரணமடைந்தார். இதற்கு பதிலடி கொடுக்கத் தயாரானது பகத்சிங்கின் இளம் புரட்சிப்படை. காவல் நிலைய வாசலில் பகத்சிங்கின் நண்பர்கள்,

துணை கண்காணிப்பாளர் சாண்டர்சை சுட்டுக் கொன்றனர்.

இதற்காக பகத்சிங்கின் படை வருத்தம் தெரிவித்தது. எனினும் கைதிலிருந்து தப்பித்து நாட்டு விடுதலைக்காக இன்னும் போராட நினைத்த பகத்சிங், தான் சார்ந்த புனித மதத்தின் கோட்பாடுகளையும் மீறி மொட்டையடித்து மறைமுக வேள்வியைத் தொடர்ந்தார். பாதுகாப்பு, தொழில் தகராறு மசோதாக்களுக்கு எதிராக தமது குரலை ஒலிக்கச் செய்ய பாராளுமன்றம் மீது குண்டுகள் வீச உறுதியாக இருந்தது பகத்சிங்கின் புரட்சிகர இயக்கமான இந்துஸ்தான் சோஷலிஸ்ட். யாருக்கும் காயம், பலி ஏற்படக்கூடாது என்பதில் பகத்சிங் உறுதியாக இருந்தார்.

ஏனெனில் பகத்சிங் தீவிரவாதி அல்ல. ஒரு புரட்சியாளர். திட்டமிட்டபடி 1929 ஆகஸ்டு, 8 இல் பகத்சிங்கும், பட்டுகேஷ்வர்தத்தும் பார்லிமென்ட் நுழைவாயிலில் வெடிகுண்டு வீசிவிட்டு "இன்குலாப் ஜிந்தாபாத்" என்று முழங்கிவிட்டுச் சென்றனர். முன்னதாக "செவிடர்களைக் கேட்கச் செய்யவேண்டுமானால் பலத்த சப்தம் அவசியமாகிறது" என்ற வாசகங்கள் அடங்கிய துண்டறிக்கைகளை வீசினர்.



பாராளுமன்ற தாக்குதல், லாகூர் சதி வழக்கில் கைது செய்யப்பட்ட பகத்சிங் "உங்கள் வெள்ளையர் நீதிமன்ற தீர்ப்பின்படி நாங்கள், உங்கள் அரசின் மீது போர் தொடுத்துள்ளோம். ஆகவே நாங்கள் போர்க் குற்றவாளிகள். ஒரு போர்க் குற்றவாளியைப் போலவே எங்களை நடத்த வேண்டும். உங்கள் ராணுவத்தின் துப்பாக்கியால் சுட்டே தண்டனை நிறைவேற்றப்பட வேண்டும். ஆகையால் நீதிமன்றத் தீர்ப்பின்படியே நீங்கள் நடக்க வேண்டும்" எனக் கூறினார்.

"புரட்சி என்பது மனிதசமுதாயத்தில் பிரிக்க முடியாத அங்கம்; சுதந்திரம் என்பது ஒவ்வொரு குடிமகனின் பிறப்புரிமை. அதை யாரும் தடுக்கமுடியாது" என்று சிறைக் கம்பிகளுக்குப்பின் நின்று வெள்ளையர்களுக்குப் பாடம் நடத்தினார் பகத்சிங்.

சிறையில் பகத்சிங்கைத் தோழர்கள் இறுதியாகச் சந்தித்தபோது, "தோழனே, நீ மரணத்தை நெருங்கிவிட்டாய். இதற்காக நீ கவலைப்படவில்லையே?" எனக்கேட்க, "நாட்டு விடுதலைப் போராட்டத்தில் முதலடி எடுத்துவைத்த போதே என் உயிரை நம் தாய்நாட்டுக்குத் தந்து விட்டேன். நாங்கள் விதைத்த (இன்குலாப் ஜிந்தாபாத்) முழக்கம் நாடு முழுவதும் இன்று கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களிலிருந்து உணர்வாய் உயிராய் எழுவதை இந்தச் சிறையிலிருந்து என்னால் கேட்க முடிகிறது" என்றார் பகத்சிங்.

தனது தம்பி குல்வீர்க்குமாருக்கு 1931இல் எழுதிய கடைசிக் கடிதத்தில், "நாளைக் காலை மெழுகுவர்த்தியின் ஒளி மங்குவது போல் நானும் காலை ஒளியில் கரைந்து போவேன். ஆனால் நம் குறிக்கோள் என்றும் நிலைத்திருக்கும். இன்று மறைந்து நாளை மீண்டும் பிறப்போம், நம் இந்தியத் தாய்களின் வயிற்றில் எண்ணற்ற இந்நாட்டின் வீரர்கள் வடிவில்" என்று குறிப்பிட்டிருந்தார்.

அவர் தந்தை "கடைசியாகக் கடவுளிடம் வேண்டிக்கொள்" என்றபோது,"எனக்குக் கடவுள் நம்பிக்கை அறவே கிடையாது. அப்படி கும்பிட்டு தேசத்திற்கு விரோதமாகக் கோழையாகச் சாக நான் விரும்பவில்லை"என்ற பகத்சிங்குக்கு தூக்கு நிறைவேற்ற வேண்டிய நாள், மார்ச்,24.

பெருந்திரள் மக்கள் சிறைக்கதவுகளை உடைத்து பகத்சிங் உள்ளிட்டோரை விடுவிக்க வரப்போகிறார்கள் என்ற செய்தி ஆங்கில அரசின் காதுகளை எட்ட, ஒரு நாள் முன்னதாகவே தண்டனையை நிறைவேற்ற முடிவு செய்தார்கள்.

கடைசியாக பகத்சிங்கைச் சந்தித்தவர் அவரது வழக்கறிஞர் பிரான் நாத் மேத்தா. பகத்சிங் அறையில் முன்னும் பின்னும் நடந்து கொண்டிருந்தார். வழக்கறிஞரைப் பார்த்ததும் பலமாகச் சிரித்தபடி," நான் கேட்ட புத்தகத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்களா?" என்றார்.

"கொண்டு வந்திருக்கிறேன்" என்றபடி புத்தகத்தை எடுத்து நீட்டினார் பிரான் நாத் மேத்தா. உற்சாகமான பகத்சிங் உடனே அதைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினார்.தன்னைக் கடைசியாக சந்திக்க வந்தவரிடம், தன்னைப்பற்றி, நாட்டுக்கு ஏதாவது செய்தி சொல்லிப் பேசி இருக்கலாம்.அப்படி ஏதும் நடக்கவில்லை.குனிந்த தலை நிமிராமல் புத்தகத்தைக் படித்துக் கொண்டிருந்தார் பகத்சிங்.

ரஷ்யப் புரட்சி இயக்கத்தின் தலைவர் லெனின் பற்றிய புத்தகம் அது. தூக்கு மேடைக்கு அழைப்பு வருவதற்குள் அதைப் பெருமளவு படித்து விட வேண்டும் என நினைத்தார் பகத்சிங். ஆனால் அவர் ஒற்றை அத்தியாயம் படிப்பதற்குள் காவலர்கள் வந்து விட்டனர்."உங்கள் தூக்குத் தண்டனை இன்று இரவே நிறைவேற்றப்படப் போகிறது"

பகத்சிங் புத்தகத்தை மூடி வைத்தார். எழுந்து நடக்க ஆரம்பித்தார். ராஜகுரு, சுகதேவ் இருவரும் அவரோடு இணைந்து



கொண்டனர். மூவரும் சுதந்திர முழக்கங்களை எழுப்பியபடி, பாட்டுப் பாடியபடி தூக்கு மேடை நோக்கி நடந்தார்கள்.ஜெயிலர் "இப்போதாவது கடவுளை வேண்டிக் கொள் பகத்சிங்" என்றார். "வேண்டியதில்லை.வாழ்நாள் முழுக்க அவரைக் கண்டுகொள்ளாமல் இருந்து விட்டு, இப்போது சாகப் போகும் நேரத்தில் திடீரென விழித்துக்கொண்டு தொந்தரவு செய்வது நியாயமில்லையே" என்றார் பகத்சிங்.

அவர்கள் மூவரும் தூக்கு மேடையின் மீது ஏறினார்கள்.ராஜகுரு, சுகதேவ் இருவருக்கும் நடுவில் பகத்சிங் நின்று கொண்டார்.மேலே மூன்று தூக்குக் கயிறுகள் தயாராக இருந்தன.அவர்கள் முகத்தில் துளி பயமோ, கவலையோ, கலவரமோ, கலக்கமோ இல்லை.

1931,மார்ச், 23, 24 வயதில் இந்த தேசத்திற்காக உயிரைக் கொடுத்து புரட்சிகர இளைஞர்களின் இதயங்களை என்றும் வென்ற வீரனாய் மறைந்தார் பகத்சிங். கூடவே ராஜகுரு, சுகதேவ்!

**- பாண்டியன் சுந்தரம்**



# யானையின் நினைவுத்திறன் (ஹிப்போ கேம்பஸ்)!

பொதுவாகவே யானைகளின் வாசனை உணர்வு மற்ற விலங்குகளைவிட கூர்மையானது.

அதன் தும்பிக்கையானது 2 ஆயிரம் ஆல்பாக்டரி எனப்படும் வாசனை ஏற்பிகளை கொண்டுள்ளன. இந்த ஆல்பாக்டரி ஏற்பிகளால் 12 மைல் தொலைவில் உள்ள நீர் ஆதாரங்களைகூட அவற்றால் உணர்ந்து அறிந்துகொள்ள முடியும்.

யானைகளின் தோலில் உள்ள உணர் நரம்புகள் மற்றும் கால் களில் உள்ள ஜெலட்டினஸ் என்ற திறன்மூலம், நிலத்தில் ஏற்படும் அதிர்வுகளையும் யானைகளால் உணர முடியும். இந்த உணர்திறன்களை கொண்டு சில மைல்களுக்கு அப்பால் உள்ள நீர்நிலைகளை நோக்கி செல்லும்.

இதே போல, நிலத்தில் சில அடி ஆழத்தில் தண்ணீர் இருப்பதையும் உணர்ந்து கொண்டு, தனது தந்தத்தை பயன்படுத்தி நிலத்தில் துளைகளை ஏற்படுத்தி அந்த தண்ணீரை வெளியே கொண்டு வரவும் முயற்சிக்கும்

வறட்சி காலங்களில் யானை வெளியே கொண்டு வரும் நிலத்தடி நீரை குடித்து, தண்ணீருக்காக ஏங்கும் பல வனவிலங்குகள் தாகத்தை போக்கிக் கொள்கின்றன

யானைகள் தண்ணீர் கிடைக்கும் இடத்தை தேடி 200 கிலோ மீட்டர் தொலைவு வரைகூட இடம் பெயர்ந்து கொண்டே இருக்கும். ஏற்கனவே காடுகளில் பல்வேறு இடங்களில் தண்ணீர் குடித்த நிரந்தர நீர் ஆதாரங்களை ஞாபகம் வைத்துக்கொள்ள ஹிப்போ கேம்பஸ் என்ற நினைவுத்திறன் யானைக்கு உதவுகிறது.

நமது தமிழக மேற்கு தொடர்ச்சி மலை பகுதியில் தொடர்ச்சியாக யானை மரணங்கள் வன ஆக்கிரமிப்பு காரணமும் அந்நிய தாவரங்கள் , செடிகள் காரணமும் கனிமவள கடத்தல் காரணமும் வனம் வேகமாக அழிக்கப்பட்டு வருகிறது

ஆச்சர்யங்களை நோக்கிய பயணங்கள் தொடரும்.

# விருது

## சிறுகதை

**முனைவர் இரா.கோதண்டராமன்**
கல்லூரி நூலகர்,
அரசு கலைக் கல்லூரி,
நந்தனம், சென்னை – 35
கைபேசி: 8667376522



**அ**ன்று காலையில் வந்த செய்தித்தாள்கள் மற்றும் ஊடகங்களில் ஆக்கிரமித்திருந்தச் செய்தியைப் பார்த்துப்பலர் எள்ளிநகையாடினர். சிலர் பணம்பா.. என்று கமெண்ட்டுகளை அள்ளிவீசி இருந்தனர். இதையெல்லாம் படித்தப் பரமனுக்கு ஒன்றுமேபுரியவில்லை. ஒரு திரைப்பட விருதிற்கு இவ்வளவு எதிர்ப்பா என்று சற்றுக்குழம்பிப் போனான். சரி... அந்தப்படத்தை நாமும் பார்த்தே ஆகவேண்டும் என்ற முடிவுடன், தனது வீட்டிற்கு அருகில் இருந்த திரையரங்கிற்குச் சென்றான். திரையரங்க வாசலில் ஒரு பெரியபேனர்... அதில் படத்தின் பெயர் “நாயும் நாங்களும்” என்றுப்பெரியதாகக் கொட்டைஎழுத்தில் போட்டிருந்தது. திரையரங்கின் உள்ளே நுழைந்தான் பரமன்.



நுழைவுச்சீட்டு வழங்கும் இடத்தில் கூட்டமில்லாமல் காற்று வாங்கியது. ஒரு நிமிடம் யோசிக்க ஆரம்பித்துவிட்டான் பரமன். கூட்டமில்லாத இந்தப்படத்தை காசுக்கொடுத்து நான் பார்க்கவேண்டுமா என்று சிந்திக்க ஆரம்பித்தான். அப்போது அருகில் இருந்தஇருவர் பேசிக் கொண்டிருந்தனர். ஏதோ ஒன்றுக்காகப் பத்துவிருதுகள் கொடுத்து இருக்கிறார்கள் என்று ஒருவர்கூற... அடுத்தவர் ஏதோ ஒன்று என்றால் அந்தஒன்று பணமா என்றுநக்கலடிக்க... இருவரும் சிரித்தனர். அதற்குப்பிறகு கொஞ்சம் நகர்ந்துச் சென்றபோது அங்கு இரண்டு கல்லூரிமாணவிகள் பேசிக் கொண்டிருந்தனர். படத்திற்குப் பெயரைப்பாரு... தெலுங்குப் டப்பிங் படடைட்டில் போல என்று ஒருபெண்கூற... ஆமாம்.. அந்தப் படத்தைப்பார்க்கத்தான் நாம் காலேஜைக் கட்டடித்துவிட்டு வந்துஇருக்கிறோம் என்று கூறிச்சிரிக்க இருவரும் தங்களது கைகளால் ஒருவருக்கு ஒருவர் தட்டிக்கொண்டுச் சிரித்தனர்.

இதையெல்லாம் கேட்டுக்கொண்டு நுழைவுச்சீட்டைப் பெற்றுக்கொண்டப்பரமன்... திரையரங்கினுள் நுழைந்தான். கூட்டமில்லாதக்காரணத்தால் குளிர்சாதனத்திலிருந்து வந்தக் குளிர்க்காற்று கும்மென்று சற்று நறுமணத்துடன்வீசியது. அந்த இதமானச்சூழலை அனுபவித்தவாறு தனக்காக ஒதுக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்தான். திரைப்படம் தொடங்குவதற்குமுன் போடப்படும் விளம்பரங்கள் ஒளிப்பரப்பப்பட்டது. அப்போது பரமன் அந்தத்திரையரங்கை முழுவதுமாக ஒரு நோட்டம்விட்டான். சுமார் 50 நபர்கள் திரையரங்கில் இருப்பார்கள் போல. 500 நபர்கள் அமர்ந்து ரசிக்கும் அரங்கில்... என்ற மனவோட்டத்தில் இருந்த பரமனின் மனதை மாற்றியது... நாயும் நாங்களும் என்ற திரைப்படடைட்டில்... படம் துவங்கிவிட்டது. ஒரு நாய் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருந்தது. சாலையில் கண்பார்வையற்றவர் ஒருவர் நடந்துச் செல்லும்போது,



இந்த நாய் அந்தப்பார்வையற்ற நபரின் கைத்தடியை வாயால் கவ்விக்கொண்டு சாலையின் ஒரு பகுதியிலிருந்து எதிர் முனையில் உள்ள அடுத்தப்பகுதிக்கு அவரைச் அழைத்துச்சென்று அவர் சாலையைக்கடக்க உதவிசெய்கிறது. ஒரு பணக்காரக்குடும்பத்தைச் சார்ந்தக்குழந்தை நீச்சல்குளத்திற்கு அருகில் பந்துடன் விளையாடிக்கொண்டிருக்கும் போது, அந்தப்பந்து உருண்டுவந்து நீச்சல்குளத்தில் உள்ள நீரில் விழுந்து மிதக்கிறது. அந்தப்பந்தை எடுக்க அந்தக்குழந்தை முட்டிப்போட்டுக்கொண்டு நீச்சல்குளத்தை நோக்கிவர, ஓரமாக இதனைப்பார்த்துக்கொண்டிருந்த அந்த நாய், பாய்ந்துவந்து அந்தக்குழந்தை நீச்சல்குளத்தில் விழாமல் தடுக்கிறது. இப்படியாக நாய்ப்புராணக் காட்சிகள் ஓடிக்கொண்டிருக்க, பரமனுக்குச் சிறியச்சந்தேகம் வந்துவிட்டது. படத்தின் தலைப்பு “நாயும் நாங்களும்”. ஆனால் படத்தில் பதினைந்து நிமிடங்களாக இதுவரை நாய் மட்டுமே வருகிறது. “நாயும் நாங்களும் என்கிறத் தலைப்புக்கு ஏற்றார்போன்று மனிதர்கள் யாரும் வரவில்லையே.... நாங்கள் என்பது திரைப்படத்தை பார்க்கவந்த என்னையும் இத்திரையரங்கில் இருக்கும் ஐம்பது பேருமா என்கிறச்சந்தேகம் துளிர்விட்டது.

அந்தச்சந்தேகத்திற்கு விடையளிக்கும் வகையில் படத்தில் பாதசாரி ஒருவர் சாலையில் நடந்துச் சென்றுக்கொண்டிருக்கிறார். அந்தச்சாலையின் ஓரமாக இருக்கும் அந்தநாய் பாதசாரியைத் திடீரெனத்துரத்துகிறது. அவர் நாயின்கடியில் இருந்துத்தப்பிக்க அருகில் இருக்கும் வீட்டின் கதவைத் திறந்துக்கொண்டு கதவை மூடிவிடுகிறார். இவனைத் துரத்திவந்த அந்தநாய், கதவைப்பிராண்டுகிறது கதவிற்கருகில் இருக்கும் கண்ணாடி ஜன்னலைப்பிராண்டுகிறது. அப்பாடா என்று மூச்சுவிட்ட அந்தநபர் வீட்டினுள் சுற்றிப்பார்க்கிறார். யாரையும் காணவில்லை. அதிர்ச்சியில் அவர் முழிப்பது மட்டுமில்ல... படம் பார்த்த நம்மையும் முழிக்கவைக்கிறது இடைவேளை என்கிற அறிவிப்பு.

அரங்கினுள் விற்கும் பாப்கார்னின் விலை நூறு என்பதை மட்டும் படித்துவிட்டு பத்துக்குப் பக்கத்தில் ஒரு சுழியத்தைச் சேர்த்து பாப்கார்ன் விலை என்று சொல்வது அநியாயம் என்று ஒரு சாமானியன் குரல் மனதில் ஒலிக்க அவ்விடத்தைவிட்டு நகர்ந்தான் பரமன். அங்கு ஒருவர் தனது கைபேசியில் நண்பரிடம் பேசிக்கொண்டிருந்தது தானாகவே பரமனின் காதில் விழ ஆரம்பித்தது. மச்சான்...வரும்போது ஒரு தலைவலி மாத்திரை எடுத்துக்கொண்டு வர மறந்துவிட்டேன் என்றதைக் கேட்டவாறு அரங்கினுள் நுழைந்தான்.

இடைவேளைக்குப்பிறகு மீண்டும் படம் ஓடத்துவங்கியது. நாயின் முகத்தைக்குளோசப்பில் காட்டுகிறார்கள். அந்தநாய்க்குப்பழைய நினைவுகள் வருகிறதாம். அந்தநாய் பிறந்தது முதல் தற்போது வரை ஓடியாடி விளையாடியது (நாய் படிக்கப் பள்ளிக்காபோயிருக்கும்...?) எனக் காட்சிகள் விரிவாகி நமது பொறுமையைச் சோதிக்கவைத்தது. நாயின் பழைய நினைவுகளில் வருகின்றக்காட்சிகளில் வரும் நான்குபேரும் தனித்தனியாக வெவ்வேறுக்காட்சிகளில் வருகிறார்கள். யாரும் சேர்ந்துவரவில்லை என்பது பெரியசோகம். (படம்பார்ப்பதே பெரிய சோகம் தான்)

இவர்கள் அனைவரும் அந்தநாயுடைய வாழ்க்கையில் இணைந்து பயணித்திருக்கிறார்களாம்... அதனால் நாம் அனைவரும் வாயில்லாத ஜீவன்களுடன் அன்பாகப் பயணிக்கவேண்டும் என்கிற மனிதநேயப்பண்பினைக் கூறிப்படத்தை முடித்து எங்களையெல்லாம் வெளியில் அனுப்பினார்கள். திரையரங்கிற்கு வெளியில் நாலைந்து யூடியூப் சேனல்களிடம் ஒருவர் பேட்டிக் கொடுத்துக்கொண்டிருந்தார். என்னதான் நடக்குது என்று பரமன் அருகில் போய் பேட்டியைப் பார்த்தான். நாயும் நாங்களும் படத்தின் இயக்குநர் பாலதண்டாயுதபாணி பேட்டிக்கொடுத்துக் கொண்டிருந்தார். அப்போது இந்தப்படத்திற்கு பத்து விருதுகள் கிடைத்திருக்கிறது. அதுகுறித்து உங்கள் கருத்துக்களைக்கூறுங்கள் என்று ஒருசேனல் நிருபர் கேட்டார். அதற்குப்படத்தின் இயக்குநர்... இந்தப்படத்தில் நடித்த நாயும், பிற நடிகர்களும் தனித்தனியாக பல்வேறு இடங்களில் நடித்தனர். இதில் முக்கியமானத் தகவல் என்னவென்றால், இதில்



நடித்த நடிகர்கள் யாருமே நாயுடன்நடிக்கவில்லை. நாய் இருந்தால் எப்படி நடிக்கவேண்டுமோ அப்படி நாய் இல்லாமல், அதாவது நாய் அருகில் இருப்பதுபோன்று மனதளவில் கற்பனைச்செய்துக் கொண்டு, நால்வரும் நடித்தனர். அதனை படப்பிடிப்புச் செய்த தொழில்நுட்பப்பணியாளர்கள் அனைவருமே நாய் இருப்பதுபோன்று நினைத்துக்கொண்டு படத்தை எடுத்துமுடித்து வெளியிட்டோம். குஜராத்தில் நடந்த மாபெரும் நிலநடுக்கத்தின்போது கட்டடங்கள் இடிந்து தரைமட்டமானபோது அந்த கட்டட இடிபாடுகளில் சிக்கி மயக்கமுற்று இருந்தவர்களை இந்தநாய் தனது அபாராமான மோப்பசக்தியால் அவர்களைக் காட்டிக்கொடுத்ததால் இன்று அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள். மேலும் வயநாடு, மற்றும் நேபாளத்தில் நடந்த மலைச்சரிவுகள் மற்றும் வெள்ளப்பெருக்கில் சிக்கி உயிரிழந்த உடல்களை இந்தநாய் தனது மோப்பசக்தியால் கண்டுபிடித்துத் தந்துள்ளது. ஆகையால் இந்தநாயின் சிறப்பானப்பணிகளுக்காக இந்தக் கதையில் இந்த நாயினை நடிக்க வைத்தேன். அந்த நாய்க்கும், அதன் சிறப்பான நடிப்பிற்கும் ஒரு விருது வழங்கப்பட்டுள்ளது. மேலும், இதில் நடித்த நான்கு நபர்கள் மற்றும் தொழிற்நுட்பக் கலைஞர்களுக்கு என ஆகமொத்தம் பத்து விருதுகள் எனது படத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்றார்.

அட... இவ்வளவுச் சிரமப்பட்டுத்தான் இந்தப்படத்தை எடுத்தார்களாஞ் நாம் இருநூறு ரூபாய் கொடுத்துப் படத்தைப்பார்த்து விட்டு எவ்வளவு எளிதாகப் படத்தைப்பற்றி குறைச்சொல்லி விட்டுச் சென்றுவிடுகிறோம். மேலும் நாய்களுக்கு மனிதர்கள் உணவளித்தால் அதற்கு நன்றிக்கடனாக அந்த நாயானது தனது நன்றியை பல்வேறு சூழ்நிலைகளில் வெளிப்படுத்தும். சமீபத்தில் கூட ஒரு செய்தியைத் தொலைக்காட்சியில் காட்டினார்கள். ஒரு முதியவர் தன்னந்தனியாக தனது வீட்டில் வசித்து வருகிறார். அவர் தினமும் தான் தனக்காக சமைக்கும் உணவுடன் கூடுதலாக உணவுகளை சமைத்துத் அவர்கள் வசிக்கும் வீடு உள்ள தெருவில் சுற்றித்திரியும் நாய்களுக்குத் தினமும் உணவளித்து வந்துள்ளார். ஒரு நாள் அவருக்கு உடல்நிலை சரியில்லாததால் அவர் வீட்டைவிட்டு வெளியில் வரஇயலாத நிலையில், அவரைக் காணவில்லையே என்கிற ஏக்கத்துடன் ஒரு நாய் அவர் வீட்டின் வாசலில் முதலில் வந்து நிற்கிறது. அதற்குப்பிறகு ஒவ்வொரு நாயாக வந்த நிற்க, இறுதியாக அந்தத் தெருவில் உள்ள நூற்றுக்கான நாய்கள் அந்த முதியவரைக்காண வாசலில் நின்றதை எதிர்வீட்டில் உள்ள கண்காணிப்புக் கேமராவில் பதிவான காட்சிகளைக் காட்டினார்கள் என்று பரமன் மனதிற்குள் நாய்களின் நன்றியுணர்வினை மனதிற்குள் பாராட்டினான். திரைப்பட ரசிகர்களை மகிழ்விக்க நடிகர்களும், தொழிற்நுட்பக் கலைஞர்களும் படும்பாடு சொல்லி அளவிடமுடியாது போலுள்ளது என்று பரமன் அவர்களைப் பாராட்டிக்கொண்டே வீடு வந்துச் சேர்ந்தான்.



# தள்ளிப் போடும் செயல்கள் தாமதத்தில் முடியும்!

ஒருவர் ஜப்பான் நாட்டிற்குச் சென்ற அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். அவர்களுக்கும் நமக்கும் உள்ள வித்தியாசம் யாதெனில்..

ஜப்பான் நாட்டுக்காரன் இந்த வேலையை நம்மால் குறித்த நேரத்துக்குள் முடிக்க முடியாது என்று நினைத்தால், ஒன்று மறுத்து விடுவார்கள் இல்லை அதற்கான காரணங்களைக் கூறுவார்கள்...

ஆனால் நாமோ ஒன்றுமே பேசாமல் அதை வாங்கிக் கொண்டு, பின்னர் தலையைச் சொறிந்து கொண்டு நிற்பதைப் பார்க்கின்றோம்...

"எதையுமே பிளான் பண்ணி பண்ணனும்",னு வடிவேலு காமெடியா சொன்னாலும், அதுதான் உண்மை. தவறான திட்டமிடல்களே காலதாமதத்தின் முக்கியக் காரணி.

ஒரு செயலை செய்வதற்கு முன்னரே, அதற்கான காலக்கெடு, தேவையான ஆதாரங்கள் ஆகியவை பற்றியத் தெளிவான திட்டமிடல் வேண்டும்.

சரியாகத் திட்டமிட்டு, சமயோஜித செயல்பாடுகளால் ஒரு செயலை வெற்றிகரமாக குறித்தக் காலத்துக்குள் செய்து முடிக்க முடியும்.

அரசு அலுவலர்கள், உயரதிகாரிகள் ஆகியோர்கள் எந்த வேலையும் குறித்த காலத்தில் செய்யாமல் காலதாமதமாகவே செய்கின்றார்கள்.

இந்தக் காலதாமதத்தால் தனக்கு எந்த பாதிப்பும் கிடையாது என்கின்ற போது அவர்களுக்கு ஒருவித அலட்சிய மனப்பான்மை உண்டாகிறது.

சரியான திட்டமிடல் இல்லாமல் உண்டாகும் காலதாமதம் கூட ஒருவருக்கு மிகச் சிறந்த அனுபவப் பாடத்தைக் கொடுக்கும்.

காலம் தவறாமை என்பது தலைமைப் பண்புகளில் மிக முக்கியமானது. ஒரு இடத்துக்கு மேலதிகாரிகள் சரியான நேரத்துக்கு வந்தால் தான்,அவருக்குக் கீழே வேலை செய்பவர்களும் குறித்த நேரத்திற்கு வருவார்கள்.

ஆம்.,முதலில் பொறுப்பில் உள்ளவர்கள் காலம் தவறாமல் இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

பிரச்சனை இந்த இடத்தில் இருந்தே தொடங்குவதால், இதை சரி செய்துவிட்டாலே எல்லா வேலைகளும் சிறப்பாக நடைபெறும்.

காலம் தவறாமைக்கு மற்றொரு முக்கிய எதிரி ஒத்திப் போடுதல்.

எந்த ஒரு செயலையுமே தள்ளிப் போட்டால், கண்டிப்பாக அது காலதாமதத்தில் கொண்டு சேர்த்து விடும்.

ஆம்.,நண்பர்களே..,

சுறுசுறுப்பு என்கிற மருந்தே, "தாமதம் என்ற வியாதியை" வர விடாமல் தடுக்கும் தடுப்பூசி.

நோய்க்கு மருந்து உண்பதைக் காட்டிலும், தடுப்பூசி போடுவதே புத்திசாலித்தனம்........

– விளையாட்டு உலகம் குருசாமி




# How well do you know Chennai?!

Some interesting and historical facts about places in and around Chennai...

1) Syed Shah Pettai has become **Saidapet**.

2) In 17,18-th centuries this area was under control of a Nawab and this was the garden were his horses were resting and getting fed. So it was called "Ghoda bagh" (Horse Garden). It later became **Kodambakkam**.

3) Armoured Vehicles And Depot of India became **Avadi**.

4) Several Chrome leather factories in the region resulted in this area being called **Chrompet**.

5) This area was full of coconut trees. Therefore named as “tennampettai”. It was later changed as **Teynampet**.

6) Urdu word “che baug” (six gardens) became **Chepauk**.

7) Saundara Pandian bazaar became **Pondy Bazaar**.

8) “vilva marankal” area with the flowers used for the Lord known as Mahavilvam over time has become **Mambalam**.

9) pallavapuram became **Pallavaram**.

10) Madras Presidency head was Panagal Raja at one point and based on his name, the park was named as **Panagal Park**.

11) Based on the name of Justice party leader Sir. Thiagarajan Chettiar, the area is known as **T Nagar**.

12) “Purasai” trees were in abundance in the region, leading it to be called **Purasaiwalkam**.

13) “Puspakavalli” in Sanskrit due to the large amount of Jasmine plants / trees in the region became “puviruntavalli” in tamil to get transformed as **Poonamalee**.






now.

14) In the 17th century, there was a Muslim saint 'kunankuti Mastan Sahib' who lived here. Thondi was his native town in Ramanathapuram district. Therefore, the local people called him tondiyar. He used to frequent this place now known as **Tondiarpet**.

15) The area was used for grazing cattle. It was called Mandai veli before becoming **Mandaveli**.

16) Peacocks used to roam freely in this area leading it to be called Mayilai puram and later becoming **Mylapore**.

17) The Pallavas used to wage wars in this region now known as **Porur**.

18) Bamboo (Perambu) trees were found throughout this region a few hundred years ago, this is now known as **Perambur**.

19) The area surrounding the Thirusula Nathar Temple came to be known as Thirusulam. ( Trident hotel's name has come from the same source... Trident means **Thirusulam**.

20) The pond with lots of lilies (Alli flower) opposite to the Parthasarathy temple was known as Thiru allikkeni and later came to be known as **Triplicane**.

21) Thomas Parry used to do business in this area. He gained the respect of people resulting in the name Parry's Corner. That is also why it is not "**Paris Corner**"

22) This area had many Neem trees around a big lake. In tamil Neem+Lake is Vepam+yeri this is now called **Vepery**.

**- V.G.Shankar**

# உடல் பருமனைத் தடுக்க எளிய 5 மாற்றங்கள்!



**1. ஆரோக்கியமான உணவுத் தட்டு:**

பாதி தட்டில் காய்கறி - பழங்கள், கால் தட்டில் புரதம் பருப்பு, மீன், முட்டை, கால் தட்டில் முழு தானியம் கோதுமை, பிரவுன் ரைஸ், சிறுதானியம். வெள்ளை அரிசி, மைதாவை குறையுங்கள்.

**2. தினமும் நடைப்பயிற்சி 30 நிமிடம்:**

தினமும் 30 நிமிட வேக நடை = 200 கலோரி கரையும். லிஃப்டுக்கு பதில் படிக்கட்டு, பைக்குக்கு பதில் சிறு தூரத்துக்கு நடை.



**3. தண்ணீர் தான் மந்திரம்:**

ஒரு நாளைக்கு 23 லிட்டர். குளிர்பானம், பாக்கெட் ஜூஸ், அதிக சர்க்கரை டீக்கு பதில் வெதுவெதுப்பான நீர், மோர், இளநீர்.

**4. தவிர்க்க வேண்டியவை:**

பொரித்த உணவு, பதப்படுத்தப்பட்ட உணவு (பீட்சா, பர்கர், சிப்ஸ்), இனிப்பு, எண்ணெய் அதிகம். ஒரு சமோசா = 45 நிமிட நடை!

**5. தூக்கம் - மன அமைதி:**

7-8 மணி நேர தூக்கம் இல்லையென்றால் பசி ஹார்மோன் அதிகமாகும் உடல் பருமன் வரும். தினமும் யோகா, தியானம் 10 நிமிடம்.

சிறிய மாற்றம் = பெரிய வித்தியாசம்!

இன்றிலிருந்து சர்க்கரையை பாதியாக்குங்கள், தண்ணீரை இரட்டிப்பாக்குங்கள், 30 நிமிடம் நடங்கள். 3 மாதத்தில் 45 கிலோ குறையும், சர்க்கரை, BP கட்டுக்குள் வரும்.

# உண்ணி பூச்சி கடித்தால் என்ன செய்ய வேண்டும்?



**உ**ண்ணி காய்ச்சல் என்றால் என்ன? உண்ணி என்னும் சிறிய பூச்சி கடித்தால் பரவும் பாக்டீரியா தொற்று. காடு, புல்வெளி, கால்நடை உள்ள பகுதியில் அதிகம் பரவுகிறது. டெங்கு போலவே அபாயகரமானது.

**அறிகுறிகள்:**

அதிக காய்ச்சல் மற்றும் குளிர் நடுக்கம்.

தலைவலி, தசை மற்றும் மூட்டு வலி.

உடல் சோர்வு, பலவீனம்.

சருமத்தில் சிவப்பு திட்டுகள் / தடிப்புகள்

குமட்டல், வாந்தி, பசியின்மை.

**தடுக்கும் வழிகள்:**

காடு / புல்வெளிக்கு செல்லும்போது முழு கை சட்டை, முழு பேண்ட், காலணி அணியவும். உடலில் உண்ணி ஒட்டியுள்ளதா தினமும் பரிசோதிக்கவும்.

பூச்சி விரட்டி பயன்படுத்தவும்.

வீடு மற்றும் சுற்றுப்புறத்தை சுத்தமாக வைக்கவும் புல், குப்பை அகற்றவும்.

**மருத்துவர் ஆலோசனை:**

காய்ச்சல் இருந்தால் உடனே மருத்துவரை அணுகவும்.

சுயமாக மருந்து எடுத்துக்கொள்ளக் கூடாது.

நிறைய தண்ணீர், இளநீர் குடிக்கவும் ஓய்வு எடுக்கவும். சந்தேகம் இருப்பின் இரத்த பரிசோதனை செய்யவும்.

அவசர நிலை: மூச்சுத்திணறல், குழப்பம், அதிக காய்ச்சல் இருப்பின் நூற்றி எட்டு அழைக்கவும். முன்னெச்சரிக்கையே மிகச்சிறந்த மருந்து அருகிலுள்ள அரசு மருத்துவமனையை அணுகவும்.

# வாழ்க்கையில் மகிழ்ச்சியும் நிரந்தரமல்ல துயரமும் நிரந்தரமல்ல!



வாழ்க்கையின் ஏற்றத் தாழ்வுகளை ஏற்றுக்கொள்வது, வயதும் அனுபவமும் நமக்குக் கற்றுத்தரும் மிக முக்கியமான பாடங்களில் ஒன்று. நல்ல காலங்களில் எல்லாமே நிரந்தரமானவை போலத் தோன்றும். வெற்றி தன்னம்பிக்கையைத் தருகிறது; அங்கீகாரம் மனநிறைவைத் தருகிறது; உறவுகள் அரவணைப்பைத் தருகின்றன; பொருளாதார வசதிகள் பாதுகாப்பு உணர்வைத் தருகின்றன. ஆனால் சூழ்நிலைகள் எதிர்பாராத விதமாக மாறிவிடலாம். பதவிகள் மறையலாம்; உறவுகள் மாறலாம்; திட்டங்கள் தோல்வியடையலாம்; உடல்நிலை மாறுபடலாம்; செல்வநிலை தலைகீழாகலாம்; ஒருகாலத்தில் நம் வாழ்க்கையில் இன்றியமையாதவர்கள் என்று நினைத்தவர்கள் விலகிச் செல்லலாம். நமது மகிழ்ச்சி முழுவதும் சாதகமான சூழ்நிலைகளை மட்டுமே சார்ந்திருந்தால், ஒவ்வொரு மாற்றமும் ஒரு நெருக்கடியாகிவிடும்.

தோல்வியை ஒப்புக்கொள்வதற்கு மிகுந்த மனவலிமை தேவை. நமது நல்ல நோக்கங்களும் கடினமான முயற்சிகளும் இருந்தபோதிலும் ஏதோ ஒன்று சரியாக அமையவில்லை என்பதை ஏற்றுக்கொள்வதே அது. நமது முடிவு தவறாக இருந்திருக்கலாம். தயாரிப்பு போதாமையாக இருந்திருக்கலாம். சூழ்நிலைகள் மாறியிருக்கலாம். நாம் எதிர்பார்த்த விதத்தில் மற்றவர்கள் செயல்படாமல் இருந்திருக்கலாம். சில சமயங்களில் நாம் செய்ய வேண்டிய அனைத்தையும் சரியாகச் செய்திருந்தாலும் தோல்வி ஏற்படலாம். உண்மையான முயற்சி ஒவ்வொன்றுக்கும் சாதகமான முடிவு கிடைக்கும் என்று வாழ்க்கை எந்த உத்தரவாதத்தையும் தருவதில்லை.

தோல்வியை எப்போதும் அவமானமாகக் கருத வேண்டியதில்லை. அது நமக்குக் கிடைக்கும் ஒரு



தகவலாகவும் இருக்கலாம். கசப்பின்றி ஆராய்ந்தால், தோல்வி வாழ்க்கையின் மிகச் சிறந்த ஆசிரியர்களில் ஒன்றாக மாறுகிறது.

அதே நேரத்தில் வெற்றியை ஏற்றுக்கொள்வதும் முக்கியமானது. சிலர் தங்களைப் பெருமைப்படுத்திக் கொள்கிறார்கள் என்று மற்றவர்கள் நினைத்துவிடுவார்களோ என்ற அச்சத்தில் தங்களுடைய சாதனைகளையே ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறார்கள். நமது ஒழுக்கம், கடின உழைப்பு, விடாமுயற்சி, துணிச்சல் அல்லது சரியான முடிவுகள் நல்ல பலனைத் தந்தன என்பதை உணர்வதில் தவறில்லை. பணிவு என்பது நமது சாதனைகளை மறுப்பதல்ல; அந்தச் சாதனைகளை மற்றவர்களைவிட நாம் உயர்ந்தவர்கள் என்ற எண்ணமாக மாற்றாமல் இருப்பதுதான்.

வாழ்க்கையின் பெரும்பகுதி நமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது. மனிதர்கள் நம்மைத் தவறாகப் புரிந்துகொள்வார்கள். திட்டங்கள் தடம் புரளும். வாய்ப்புகள் வரும்; மறையும். சில போராட்டங்களில் வெல்வோம்; சிலவற்றில் தோற்போம். சில நேரங்களில் நமக்குத் தகுதியானதைவிட அதிகமாகக் கிடைக்கும்; வேறு சில நேரங்களில் நமக்குத் தகுதியானது என்று நாம் நம்புவதைக் காட்டிலும் மிகவும் குறைவாகவே கிடைக்கும். நமது நியாய உணர்வுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ப இந்த உலகம் எப்போதும் இயங்காது.

காலப்போக்கில் வாழ்க்கையின் உயர்வுகள் நன்றியுணர்வைக் கற்றுத்தருகின்றன; தாழ்வுகள் மீண்டு எழும் மனவலிமையைக் கற்றுத்தருகின்றன; வசதிகள் அவற்றின் மதிப்பை உணர்த்துகின்றன; அசௌகரியங்கள் அனுசரித்துச் செல்லும் திறனை வளர்க்கின்றன; வெற்றிகள் தன்னம்பிக்கையைத் தருகின்றன; தோல்விகள் ஞானத்தைத் தருகின்றன. இவை அனைத்துமே நமக்குத் தேவை.



வாழ்க்கை எப்போதும் நமது விருப்பப்படி அமைய வேண்டிய அவசியமில்லை; அப்படி அமையாதபோதும் அது அர்த்தமுள்ளதாகவும், அழகானதாகவும், வாழத் தகுந்ததாகவும் இருக்க முடியும் என்பதைப் புரிந்துகொள்வதே வாழ்க்கை நமக்குக் கற்றுத்தரும் ஆழமான ஞானங்களில் ஒன்றாகும். மகிழ்ச்சியும் நிரந்தரமல்ல; துன்பமும் நிரந்தரமல்ல என்பதை ஏற்றுக்கொள்ளும் மனநிலையை நமக்குக் கற்றுத்தருகிறது.


# மித்ரா டைம்ஸ்

## சந்தா தொகை அனுப்பி விட்டீர்களா!

**சந்தா செலுத்துபவர்களுக்கு சிறப்பு சலுகையாக...**

**மித்ரா டைம்ஸ் இதழுடன்...**

**பெண் உலகம், மித்ரா பிக்சர்ஸ் நியூஸ்**

**ஆகிய இரண்டு இணைப்பு இதழ்கள் அனுப்பி வைக்கப்படும்.**

**சந்தா செலுத்துபவர்களுக்கு மட்டுமே இந்த சிறப்பு சலுகை**

**3 ஆண்டு சந்தா : 900/-**

**6 ஆண்டு : சந்தா: 1500/-**

**தொடர்புக்கு: சந்தா மேலாளர் 9003107102**





**கை**யை கூப்பிக் கொண்டும், கைகளை தூக்கி அசைத்துக் கொண்டும் உள்ளே வந்தார் கபாலி கான்.

அவருக்கென்று வாங்கி வைத்திருந்த மொறு மொறு பிஸ்கட் தட்டில் பரப்பி சூடாக காப்பியும் வைத்தோம். ஒவ்வொரு பிஸ்கட்டாக காபியில் தொட்டு சாப்பிட்டு கொண்டு இடைத்தேர்தல் களங்களை சுற்றி பார்த்துவிட்டு வருகிறேன். என்றார்.

**அப்போ நிறைய விஷயங்கள் கிடைக்கும் என்று சொல்லுங்க..**

ஆமாம் என்று சொல்லிக் கொண்டு காபியில் நனைத்த பிஸ்கட்டை சுவைத்துக் கொண்டு களம் வெயிலை விட கடுமையான சூடாக இருக்கிறது

வழக்கமா ஆளுங்கட்சி தானே இடைத்தேர்தலில் ஜெயிக்கும் .

ஆமாம் என்று நாம் சொல்லும் முன்பே,

அது ஏற்கனவே ஆண்ட திராவிட கட்சிகளின் பார்முலாவில் சாத்தியமானது.

இப்ப?

களப்பணியில் கழகங்களை தொடுவதற்கு இன்னும் பயிற்சி தேவை என்றாலும் ,70 ஆண்டுகள் தேர்தல் களம் காணும் தி.மு.க.விற்கும்,50 ஆண்டுகள் தேர்தல் களம் காணும் அ.தி.மு.கவிற்கும் இணையாக களம் காண்பது த.வெ.க.வுக்கு சவால் என்றாலும் அதை சமாளிப்பது அவர்களுக்கு எளிதாக இருக்கிறது.

கூட்டணி கட்சிகளின் பங்கு இந்த இடை தேர்தலில் குறைவுதான்.

யாருக்கு?

ஆளுங்கட்சியான த.வெ.க.வுக்குதான்.

எப்படி?

கூட்டணியில் இருக்கின்ற கம்யூனிஸ்ட் கட்சிகள் தங்களது வேட்பாளர்களை நிறுத்தி இருக்கிறார்கள். அவர்களை வெற்றி பெற வைக்க பிரச்சாரம் செய்து வருகிறார்கள். மற்ற கட்சிகளான காங்கிரஸ் ,வி.சி.க., மதிமுக, போன்ற கட்சிகள் பிரமாதமாக வேலை செய்கிறார்கள் என்று சொல்ல முடியாது. தி.மு.க கூட்டணியில் இருக்கும் தே.மு.தி.க. தலைவர் பிரேமலதா விஜயகாந்த் இரண்டு தொகுதிகளிலும் முழுமையாக பிரச்சாரம் செய்து திமுகவுக்கு வாக்கு சேகரித்தார். அதேபோல ஜவாஹிருல்லா, தமிமுன் அன்சாரி ஆகியோர் களத்தில் இறங்கி வேலை செய்கிறார்கள். ஆனாலும்...




என்ன ஆச்சு?

இரண்டு தொகுதிகளிலும் ஏற்கனவே ஒரு கட்சியில் நின்று வெற்றி பெற்று சட்டமன்ற உறுப்பினராகி அந்த கட்சியில் இருந்து 12 நாட்களுக்குள் ராஜினாமா செய்து விட்டு இன்னொரு கட்சியில் சேர்ந்து மீண்டும் வாக்கு கேட்க வருவது என்பது பொதுமக்கள் நடுநிலையாளர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. ஆளுங்கட்சிக்கு சாதகமாக கள நிலவரம் இல்லை என்ற தகவல் முதலமைச்சர் ஜோசப் விஜய்க்கு சென்றவுடன் அவர் மீண்டும் இரண்டாவது முறையாக களமிறங்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

**அப்படியா?**

ஆமாம் வழக்கமாக ஒரு பொது மேடையில் பேசிவிட்டு போனவர் இந்த முறை மீண்டும் ரோடு ஷோ என்று சொல்லப்படுகின்ற மக்களோடு இணைந்து பயணிக்கின்ற நிகழ்ச்சியை நடத்தினார். குறிப்பாக மதுராந்தகம் பகுதியில் டிராக்டர் ஓட்டினார். டீக்கடையில் உட்கார்ந்து டீ சாப்பிட்டார். விடியல் பயணத் திட்டத்தை துவக்கி வைத்து அவரே டிக்கெட் கிழித்து கொடுத்து கோயம்பேடு பேருந்து நிலையத்தில் மக்களோடு மக்களாக கலந்து நின்றார்.

**ஓ.. பிரமாதம்**

தி.மு.க தலைவர் ஸ்டாலின் பிரச்சாரத்துக்கு வர மாட்டார் .உதயநிதி பார்த்துக் கொள்வார் என்று சொல்லப்பட்டது. ஆனால்....

மு.க .ஸ்டாலின் கடைசி இரண்டு நாட்கள் தாராபுரம் மதுராந்தகம் ஆகிய இடங்களில் ரோடு ஷோ நடத்தினார். மக்கள் கூட்டம் அலைமோதியது. ஆனால் தாராபுரத்தில் அவர் பேசிய பேச்சு அரசியல் அரங்கில் ஒரு அதிர்வை ஏற்படுத்தியிருக்கிறது.

**என்ன பேசினார்?**

தாராபுரம் வேட்பாளர் சத்தியபாமா அவர்களை குறிப்பிடும் போது இந்த உடம்பை வைத்துக் கொண்டு எப்படி தான் பல்டி அடித்தார்களோ என்று சொன்னது, வெறும் வாயை மெல்லுபவர்களுக்கு அவரே அவல் கொடுத்தது போல் ஆகிவிட்டது.

**என்ன ஆச்சு!**

உடனே பெண்களுக்கு எதிராக திமுகவினர் வழக்கமாக பேசும் பேச்சு இது என்று சொல்லி த.வெ.க. பிரச்சாரம் செய்ய ஆரம்பித்து விட்டது.









முன்பெல்லாம் ஒரு செய்தி மக்களை சென்றடைய பத்திரிக்கை மூலம் குறைந்தது ஒரு நாளாவது ஆகும் ஆனால் இன்றைக்கு ஒரு நொடியில் தெரிந்து விடுகிறது. இதேபோல் இன்னொரு சம்பவம்.

தாராபுரம் நிகழ்ச்சியில் வேட்பாளர் பேசும்போது அமைச்சர் ராஜ்மோகன் அவர் காதில் ஏதோ சொன்னதாகவும் உடனே அவர் திடீரென்று அழ ஆரம்பித்து விட்டதாகவும் அந்த காணொளியை வெளியிட்டு தி.மு.க.வினர் விமர்சனம் செய்தனர். ஆனால் அதை அமைச்சர் ராஜமோகன் தன் தாய் மீது சத்தியமாக தான் அப்படி செய்யவில்லை. நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தவர்கள் சீக்கிரம் முடிக்க சொல்லி சொல்ல சொன்னார்கள் அதை தான் சொன்னேன் என்று விளக்கம் தந்து இருக்கிறார். இதைத்தான் அன்றைக்கு பகல்ல அக்கம் பக்கம் பார்த்து பேசு ராத்திரில அது கூட பேசாதே என்று சொன்னார்களோ என்னவோ என்று சொல்லிக் கொண்டு வெளியேறினார் கபாலிகான்.

# EB பெயர் மாற்றம்:
# வீடு வாங்கிய பிறகு நீங்கள் செய்ய வேண்டிய மிக முக்கியமான பணி!

## ஒரு முழுமையான வழிகாட்டி

ஒரு புதிய வீடோ அல்லது நிலமோ வாங்கியவுடன், கிரயப் பத்திரம். Sale Deed மற்றும் பட்டா மாறுதல் செய்த கையோடு பல உரிமையாளர்கள் தங்கள் கடமை முடிந்துவிட்டதாகக் கருதுகின்றனர். ஆனால், ஒரு நிபுணத்துவ அரசு சேவை ஆலோசகராக நான் வலியுறுத்துவது என்னவென்றால், மின் இணைப்பின் பெயரை (EB Name Transfer) உடனடியாக உங்கள் பெயருக்கு மாற்றுவது மிகவும் அவசியமான ஒரு பணியாகும்.

விற்பனைப் பத்திரம் உங்களுக்கு சொத்து உரிமையை வழங்கினாலும், மின்சார வாரியத்தின் பதிவுகள் உங்கள் பெயருக்கு மாறுவதுதான் அந்த சொத்தின் அன்றாட நிர்வாக கட்டுப்பாட்டை உங்களிடம் முழுமையாக ஒப்படைக்கும். சட்டப்பூர்வ உரிமை ஆவணங்களும் (Legal Titles) பயன்பாட்டு ஆவணங்களும் (Utility Records) ஒத்துப்போகாத பட்சத்தில், எதிர்காலத்தில் நீங்கள் பல நிர்வாகத் தடைகளையும், சொத்து தொடர்பான சட்டச் சிக்கல்களையும் சந்திக்க நேரிடும். இந்த எளிய நடைமுறையை தள்ளிப்போடுவது உங்கள் மன அமைதியைக் குலைக்கும் சிக்கல்களுக்கு வித்திடும்.

மின் இணைப்பைப் பழைய உரிமையாளர் பெயரிலேயே நீடிக்க விடுவது என்பது உங்கள் சொத்து உரிமையில் நீங்களே ஒரு பலவீனமான புள்ளியை உருவாக்குவதற்குச் சமம். இதன் ஆபத்துகளைப் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யலாம்:

உடைமைச் சான்று மற்றும் சட்ட சிக்கல்கள் (Secondary Evidence of Possession): உரிமையியல் நீதிமன்றங்களில் (Civil Courts), மின்சார ரசீதுகள் பெரும்பாலும் அந்தச் சொத்தில் ஒருவர் வசிப்பதற்கான அல்லது அதை அனுபவிப்பதற்கான 'இரண்டாம் நிலை உடைமைச் சான்றாக'Secondary evidence of possession) ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

பெயர் மாற்றம் செய்யாமல் விடுவது, பழைய உரிமையாளர் அல்லது அவரது வாரிசுகள் அந்தச் சொத்தின் மீது தேவையற்ற உரிமை கோரல்களை




முன்வைக்க ஒரு சட்டப்பூர்வ வாய்ப்பை (Evidentiary foothold) ஏற்படுத்திக் கொடுத்துவிடும்.

வாரிசுதாரர் பிரச்சனைகள் (Heir-related Legalities): பழைய உரிமையாளர் காலமானால், அவருடைய வாரிசுகளிடம் இருந்து 'தடையின்மைச் சான்று' (NOC) பெறுவது மிகவும் கடினமான காரியமாகி விடும். இது மின் இணைப்பு தொடர்பான எந்தவொரு மாற்றத்தையும் செய்ய முடியாத முட்டுக்கட்டையை உருவாக்கும்.

பராமரிப்பு மற்றும் தொழில்நுட்பத் தடைகள் (Maintenance Hurdles): உங்கள் வீட்டில் மின் மீட்டர் பழுதானாலோ அல்லது கூடுதல் மின் சுமை (Additional Load) தேவைப்பட்டாலோ, நீங்கள் சட்டப்பூர்வமாக விண்ணப்பிக்க முடியாது. பதிவு செய்யப்பட்ட உரிமையாளரின் அடையாளச் சான்று அல்லது ஒப்புதல் இல்லாமல் மின் வாரியம் எந்தப் பணியையும் மேற்கொள்ளாது.

இணைப்பு நிலை குறித்த அபாயங்கள் (Active vs. Disconnected): நீங்கள் வாங்கிய வீட்டின் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட நிலையில் (Disconnected) இருந்தால்,

அதை மீண்டும் பெறுவதற்குப் புதிய இணைப்புக்கான கூடுதல் கட்டணங்களை செலுத்த வேண்டியிருக்கும். பெயர் மாற்றம் செய்யாமல் இருந்தால், இந்த நிலுவைத் தொகைகளும் அபராதங்களும் உங்கள் தலையிலேயே விழும்.

பெயர் மாற்றச் செயல்பாட்டை விரைவுபடுத்த, பின்வரும் ஆவணங்களை முறையாகத் தயார் நிலையில் வைத்திருங்கள்:

விற்பனைப் பத்திரம் (Sale Deed): சொத்து கைமாறியதற்கான முதன்மை ஆதாரம்.

பட்டா (Patta): இதுதான் பெயர் மாற்றத்திற்கான 'கோல்டன் டிக்கெட்' (Golden Ticket). பட்டா உங்கள் பெயரில் இருந்தால், மின் வாரியம் உங்கள் விண்ணப்பத்தை மிக எளிதாக அங்கீகரிக்கும்.

பழைய மின் கட்டண ரசீது (Old EB Bill): மின் இணைப்பு மற்றும் நுகர்வோர் எண்ணைச் சரிபார்க்க அவசியம்.

சொத்து வரி ரசீது (Property Tax Receipt): தற்போதைய உரிமையாளர் பெயரில் வரி செலுத்திய ரசீது (இருந்தால்).

அடையாளச் சான்று (ID Proof): புதிய உரிமையாளரின் ஆதார் அல்லது வாக்காளர் அடையாள அட்டை.

நிபுணத்துவ ஆலோசனை: வீடு வாங்கும் போதே






விற்பனையாளரிடம் இருந்து மின் இணைப்பு பெயர் மாற்றத்திற்கான கையொப்பமிடப்பட்ட படிவம் மற்றும் ஒரு தடையின்மைச் சான்றிதழை (NOC) பெற்றுக்கொள்வது உங்கள் வேலையை 100% எளிதாக்கும். நிலுவை தொகைகள் இல்லாத "சுத்தமான" ஆவணங்கள் இருந்தால், 15 நாட்களுக்குள் ஒப்புதல் கிடைப்பது உறுதி.

மின் இணைப்புப் பெயர் மாற்றத்தை நீங்கள் இரண்டு வழிகளில் மேற்கொள்ளலாம்:ஆன்லைன் முறை: TANGEDCO-வின் அதிகாரப்பூர்வ இணையதளப் போர்ட்டல் (TANGEDCO Web Portal) வழியாக நீங்களே விண்ணப்பிக்கலாம். ஆஃப்லைன் முறை: உங்கள் பகுதிக்கு உட்பட்ட மின் வாரியப் பிரிவு அலுவலகத்தில் (Assistant Engineer - AE Office) நேரடி விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம்.

கட்டண விவரம்: இதற்கான அதிகாரப்பூர்வக் கட்டணம் பொதுவாக ₹600 முதல் ₹800 வரை இருக்கும். இது பெயர் மாற்றத்திற்கான கட்டணம் மட்டுமே; மின் வாரியம் தேவைப்பட்டால் பாதுகாப்பு வைப்புத் தொகையில் (Security Deposit) மாற்றங்கள் செய்யக் கோரலாம் என்பதை நினைவில் கொள்க.

காலக்கெடு: ஆவணங்கள் சரியாக இருந்தால், 15 முதல் 20 நாட்களுக்குள் பெயர் மாற்றம் நடைமுறைக்கு வரும்.

எச்சரிக்கை: எப்போதும் அதிகாரப்பூர்வ ரசீதுகளை (Official Receipts) மட்டுமே நம்புங்கள். இடைத்தரகர்களைத் தவிர்த்து, முறையான ரசீது பெறுவது உங்கள் கட்டணம் மின் வாரியத்தைச் சென்றடைவதை உறுதி செய்யும்.

வீடு வாங்குவதற்கு முன்பே அந்த மின் இணைப்பு "Active" நிலையில் உள்ளதா அல்லது நிலுவைத் தொகை காரணமாக துண்டிக்கப்பட்டுள்ளதா என்பதை சரிபார்ப்பது ஒரு புத்திசாலித்தனமான முதலீட்டாளரின் அடையாளம்.

– வி.எம்.குருசாமி

# எம் பதில்கள்

**பழைய இலக்கியங்களை காப்பியடித்து எழுதுவார் என்று கண்ணதாசன் மீதான குற்றச்சாட்டு குறித்து.....**

***செந்தில், சீர்காழி***

எளிமையாய் வார்த்தைகளில் இனிமையாய் இலக்கியங்கள். "கதை கட்ட ஒருவன் பிறந்துவிட்டால்கண்ணகி வாழ்விலும் களங்கமுண்டு"என ஒரு பாடலில் எழுதி இருப்பார் கவியரசர்.

கண்ணகியையே களங்கம் சொன்னவர்கள் ..கண்ணதாசனை குறை சொல்லாமல் இருப்பார்களா.?." கண்ணதாசன் பழைய இலக்கியங்களை காப்பி அடித்து எழுதுவார் "..என்று ...வந்த நாள் முதல் இந்த நாள் வரை ...அவரை வசை பாடுவோர் எப்போதும் உண்டு!. ஆனால் கனமான அர்த்தம் பொதிந்த அன்றைய இலக்கியங்களை எளிமையாக்கி எழுதி , இனிமையாக நம் இதயங்களுக்கு புரிய வைத்தவர் கவியரசர் கண்ணதாசன் அவர்கள்.



திருமூலரின் திருமந்திரத்தில் காணப்படும் இந்த வாழ்க்கை சித்தாந்தத்தை நம்மில் எத்தனை பேரால் புரிந்து கொள்ள முடியும்..?

"உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் என்பவர்க்கு

உள்ளத்தும் உள்ளன் புறத்துள்ளன் எம்மிறை

உள்ளத்தும் இல்லை புறத்தில்லை என்பவர்க்கு

உள்ளத்தும் இல்லை புறத்தில்லைதானே?"

இதை எளிமைப்படுத்தி இனிய பாடலாக நமக்குத் தந்து புரிய வைத்தவர் கவியரசர்.

"தெய்வம் என்றால் அது தெய்வம் - அது

சிலையென்றால் வெறும் சிலைதான்

உண்டு என்றால் அது உண்டு -

இல்லை என்றால் அது இல்லை"

வார்த்தைகள் கஷ்டப்படுத்தினால் மாற்றிக் கொள்ளலாம்...ஆனால் வாழ்க்கையை நம் இஷ்டப்படி மாற்றிக் கொள்ளக் கூடாது என்பதையும் இப்படி அர்த்தமுடன் ஆழமாகச் சொல்லி இருக்கிறார் கண்ணதாசன் !

"யாருக்காகவும் உன்னை மாற்றி கொள்ளாதே.

ஒருவேளை மாற நினைத்தால், ஒவ்வொரு மனிதருக்காகவும் நீ மாற வேண்டி வரும்."

**ஆசியவிளையாட்டு போட்டியில் அசத்தியிருக்கார்களே இந்தியர்கள்!**

***மாணிக்கம், மதுரை***

ஆமாம் 44 ஆண்டுகளாக இல்லாத



சாதனையை முறியடித்திருக்கிறார்கள்.. ஜப்பானில் நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டுப் போட்டியில் நேற்று ஒரே நாளில் இந்தியா 6 தங்கப்பதக்கங்கள் வென்றது. குத்துச்சண்டையில் இந்திய வீரர், வீராங்கனைகள் ஹாட்ரிக் தங்கப் பதக்கம் வென்றனர். அதேவேளையில் வில்வித்தை, மல்யுத்தம், மகளிர் ஹாக்கியிலும் இந்தியாவுக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது. ஆசிய விளையாட்டில் 44 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போதுதான் இந்திய மகளிர் அணி தங்கப் பதக்கம் வென்றுள்ளது. தங்கப் பதக்கம் வென்றதன் வாயிலாக 2028ம் ஆண்டு லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிக்கு இந்திய மகளிர் அணி நேரடியாகத் தகுதி பெற்றது.

ஆசிய விளையாட்டு போட்டியின் 14வது நாளின் முடிவில் இந்தியா 16 தங்கம், 25 வெள்ளி, 35 வெண்கலம் என 76 பதக்கங்களை வென்று 5வது இடத்துக்கு முன்னேறியது.

தமிழகத்தைச் சேர்ந்த வித்யா ராம்ராஜ் 400 மீட்டர் தடை ஓட்டத்தில் பி.டி. உஷாவின் 42 ஆண்டு கால சாதனையை முறியடித்து வரலாற்று சாதனை படைத்த புகழ்பெற்ற இந்திய தடகள வீராங்கனை ஆவார்.

2026 ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 4x400 மீட்டர் மகளிர் தொடர் ஓட்டத்தில் தங்கமும், கலப்புப் பிரிவில் வெள்ளியும், 400 மீ தடை ஓட்டத்தில் வெண்கலமும் வென்றுள்ளார்.

**தினமும் முட்டை சாப்பிடலாமா?**

**எஸ்.சுரேஷ், திருவெற்றியூர்.**

எது நமக்கு உடலுக்கு ஏற்றதாக அமைகிறதோ அதை சாப்பிடலாம். இதைத்தான் சாப்பிட வேண்டும் என்று சொல்வதற்கு யாருடைய ஆலோசனையும் தேவையில்லை இருந்தாலும் நீங்கள் கேட்டு விட்டீர்கள். முட்டையின் பலன்கள் தெரிந்து கொண்டால் அதைதினமும் சாப்பிடுவது பற்றி நீங்க முடிவு பண்ணிக்கோங்க.



ஒரு முட்டையில் சுமார் 6 கிராம் உயர்தரப் புரதம் உள்ளது. இது தசை வளர்ச்சிக்கும் பலத்திற்கும் உதவுகிறது. முட்டையில் உள்ள 'கோலின்' (Choline) என்ற சத்து மூளையின் நினைவாற்றலையும் செயல்பாட்டையும் மேம்படுத்துகிறது. முட்டையில் உள்ள ஆன்டிஆக்ஸிடன்ட்கள் கண் புரை மற்றும் கண் தொடர்பான நோய்களைத் தடுக்க உதவுகின்றன.

முட்டை சாப்பிடுவதால் நீண்ட நேரம் வயிறு நிறைந்தது போன்ற உணர்வு ஏற்பட்டு, உடல் எடையைக் குறைக்க உதவுகிறது.

மஞ்சள் கருவில் உள்ள வைட்டமின் டி எலும்புகள் மற்றும் பற்களை வலுவாக்குகிறது.

உடல் உழைப்பு அதிகம் உள்ளவர்கள் தினமும்2முட்டைகள்வரைசாப்பிடலாம் என்றும்,அதிக கொலஸ்ட்ரால் அல்லது இதயப் பிரச்சனை உள்ளவர்கள், மஞ்சள் கருவைத் தவிர்த்துவிட்டு வெள்ளைக்கருவை மட்டும் உண்பது பாதுகாப்பானது. என்றும் சொல்லப்படுகிறது.

# வெற்றிக்கு அடிப்படை தன்னம்பிக்கையே!



எல்லோருக்கும் ஆசைகள் இருக்கின்றன; கனவுகள் இருக்கின்றன; உயர வேண்டும் என்ற எண்ணமும் இருக்கிறது. ஆனால் எல்லோரும் வெற்றி பெறுவதில்லை. காரணம், வெற்றியாளர்களின் கனவுகளுக்குப் பின்னால் வெறும் ஆசை மட்டும் இருப்பதில்லை; அதை அடைந்தே தீர வேண்டும் என்ற உறுதியும் இருக்கிறது.

அவர்களிடம் சாதிக்க வேண்டும் என்ற வெறி இருக்கிறது. வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற வைராக்கியம் இருக்கிறது. வென்று காட்ட வேண்டும் என்ற பிடிவாதம் இருக்கிறது. அவர்களுடைய இலக்கு தெளிவானது; அதை நோக்கிய பயணம் தீவிரமானது.

வாய்ப்புகள் தங்களைத் தேடி வரும் என்று அவர்கள் காத்திருப்பதில்லை. வாய்ப்புகளைத் தேடுகிறார்கள்; கிடைக்காவிட்டால் உருவாக்குகிறார்கள். மற்றவர்களுக்குத் தடையாகத் தெரிவது அவர்களுக்கு ஒரு புதிய வாய்ப்பாகத் தெரிகிறது. தேவையான நேரத்தில் வசதிகளையும் பொழுதுபோக்குகளையும் ஒதுக்கிவிட்டு உழைக்கிறார்கள்.

தடை, தாமதம், தோல்வி எது வந்தாலும் பயணத்தை நிறுத்துவதில்லை. வெற்றியாளர்கள் தோல்வியே அடையாதவர்கள் அல்ல; ஒவ்வொரு தோல்விக்குப் பிறகும் மீண்டும் எழுந்தவர்கள். அடிமேல் அடி விழுந்தாலும் அடுத்த அடியை எடுத்து வைக்கும் துணிச்சல்தான் அவர்களின் தனித்தன்மை.

“எனக்கு எல்லாம் தெரியும்” என்று அவர்கள் நினைப்பதில்லை. தொடர்ந்து கற்றுக்கொள்கிறார்கள். தங்களுடைய அறிவையும் திறமையையும் வளர்த்துக்கொள்கிறார்கள். விமர்சனத்தில் உண்மை இருந்தால் திருத்திக்கொள்கிறார்கள்; இல்லையென்றால் அதைக் கடந்து செல்கிறார்கள். இலக்கில் உறுதியாக இருந்தாலும், சூழ்நிலைக்கு ஏற்ப தங்களை மாற்றிக்கொள்ளும் பக்குவமும் அவர்களிடம் இருக்கிறது.

நேரத்தின் மதிப்பை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். நேற்றைவிட இன்று எவ்வளவு வளர்ந்திருக்கிறோம் என்று தங்களைத் தாங்களே அளந்து பார்க்கிறார்கள். மற்றவர்களை வெல்வதைவிட, நேற்றைய தங்களை இன்று வெல்வதையே உண்மையான முன்னேற்றமாகக் கருதுகிறார்கள்.

இவை அனைத்திற்கும் அடித்தளமாக இருப்பது ஒன்றுதான் அசைக்க முடியாத தன்னம்பிக்கை.

தன்னம்பிக்கை என்பது, “நான் ஒருபோதும் தோற்கமாட்டேன்” என்று நினைப்பதல்ல; “தோற்றாலும் மீண்டும் எழுவேன்” என்று நம்புவது. தடைகள் வராது என்று எதிர்பார்ப்பதல்ல; “எந்தத் தடை வந்தாலும் அதைத் தாண்டுவதற்கான வழியைக் கண்டுபிடிப்பேன்” என்று நம்புவது.

வெற்றி என்பது ஒரே நாளில் நிகழும் அதிசயம் அல்ல. அது தினமும் எடுக்கப்படும் சிறிய முயற்சிகள், ஒழுக்கம், உழைப்பு, தியாகம், தோல்வியிலிருந்து கற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் ஆகியவற்றின் கூட்டுத்தொகை.

அதனால்தான் ஜெயித்தவர்களிடம் ஒரு நெருப்பு எப்போதும் எரிந்துகொண்டே இருக்கிறது. “என்னால் முடியும்... நான் முயற்சியை நிறுத்த மாட்டேன்.. விழுந்தாலும் மீண்டும் எழுவேன்...” அந்த நெருப்பின் பெயர்தான் - அசைக்க முடியாத தன்னம்பிக்கை.

# காற்றில் கரைந்த ஈகோ

அந்த, 17ம் நம்பர் பிளாட், பரபரப்பாக இருந்தது. அங்கு வசிப்பது, ராகவன் மீனாட்சி என, இரண்டே பேர் தான். திருமணமாகி இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், ராகவனின் அசுரத்தனமான கோபம், அவர்களுடன் இன்னும் மூன்று பேர் வசிப்பதைப் போன்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கியது.

தனியார் நிறுவனம் ஒன்றில், எம்.டி., ஆக இருந்தான், ராகவன். அவனுக்கு கீழ், 60 ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். தன்னை பார்த்து அனைவரும் பயப்பட வேண்டும் என்று நினைக்கும் ரகத்தைச் சேர்ந்தவன். எம்.டி., என்பதால், அவன் திட்டினாலும் சகித்துக் கொள்வர். தன்னைக் கண்டு பயப்படுவதாக நினைத்துக் கொள்வான், ராகவன். இந்த எண்ணம் வீட்டிலும் தொடர்ந்தது.

எம்.ஏ., எகனாமிக்ஸ் படித்தவள், மீனாட்சி. பள்ளிப் பருவத்திலிருந்தே நீச்சலில் சாம்பியன். தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்தாள். திருமணத்திற்குப் பின், ராகவன் இஷ்டப்படாததால் வேலையை விட்டு விட்டாள்.

ராகவனுக்கு, கம்பெனி மட்டுமல்ல, வீட்டிலும் தான் தான் பாஸ் என்ற எண்ணம் மேலோங்கி இருந்தது. எதற்கெடுத்தாலும், 'டென்ஷன்' ஆகி, மாதத்தில் இரண்டு முறையாவது மீனாட்சியை அடித்து விடுவான். அவள் பெரிதாக எந்த தவறும் செய்திருக்க மாட்டாள். ஆனாலும், அவன் கை, அவள் கன்னத்தைப் பதம் பார்க்கும்.

எந்த, 'ரியாக் ஷனும்' இல்லாமல் கண்களை இறுக மூடி, அமைதியாக நிற்பாள், மீனாட்சி. அவன் சீறிவிட்டு வெளியேறியதும், அவள் கண்களிலிருந்து ஆறாய் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடும். சிலசமயம், அவள் இப்படி அமைதியாக நிற்பதைக் கூட, தன்னை அவமானப்படுத்துவதாக உணர்வான்.

'அடி வாங்கிட்டு அமைதியா நிக்கிறியே... சூடு, சொரணை இல்லியா... திருப்பி என்னை அடிக்கணும்ன்னு உனக்குத் தோணலியா?' என்பான்.

அப்போதும், அமைதியாகவே நிற்பாள், மீனாட்சி.

அலுவலகத்தில் அன்று இப்படித்தான். பி.ஏ., மாலதி, ஒரு முக்கிமான கடிதத்தில் சில பிழைகளைச் செய்துவிட, அவளைக் கூப்பிட்டான்.

"எஸ் சார்!"



"மாசம், 5ம் தேதி ஆனதும், சம்பளம் வாங்கத் தெரியுதுல்ல. வேலையில் கவனம் வேணாமா?"

"சாரி சார்..."

"என்ன சாரி பூரின்னு. இத ஒண்ண நல்லாக் கத்து வெச்சிருக்கீங்க... ஆ வூன்னா, சாரி சார், சாரி சார்ன்னு சொல்லி தப்பிச்சுக்க வேண்டியது."

"இப்பவே சரி பண்ணி எடுத்து வந்துடறேன், சார்."

கோபத்தில் கடிதத்தை அவள் முகத்தில் விட்டெறிந்தான்.

மாலதிக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது. அவள் அந்த கம்பெனியில் சேர்ந்து ஒரு ஆண்டு தான் ஆகிறது.

"சார், நீங்க பாஸா இருக்கலாம். அதுக்குன்னு ஒரு வரைமுறை இருக்கு. நீங்க தப்பே பண்ணதில்லையா... போன மாசம், சி.எம்.டி., உங்களை வாங்கு வாங்குன்னு வாங்கினாரே, எனக்குத் தெரியாதுன்னு நெனைச்சீங்களா?"

'டென்ஷன்' பல மடங்கு அதிகரிக்க, என்ன செய்கிறோம் என்று புரியாமல், அவளை அடிக்கக் கையை ஓங்கினான், ராகவன். அடுத்த கணம், அவனுக்கு தான் செய்ய இருந்த தவறு புரிய, கையை கீழே இறக்கினான்.

அந்த சமயம் பார்த்து, 'கம்பெனி சிஸ்டம் அட்மினிஸ்ட்ரேட்டர்' வனிதா உள்ளே நுழைய, ராகவனுக்கு

கெட்ட நேரம் துவங்கியது.

இதுதான் சமயமென்று, மேலிடத்திற்குப் புகார் செய்யப் போவதாக பயமுறுத்தினாள், மாலதி.

வனிதாவின் நேரடி சாட்சியமும் இருக்கிறது. மாலதியிடம் மன்னிப்புக் கோரி பிரச்னையை முடிக்க, அவன், 'ஈகோ' தடுத்தது.

அன்று மாலை, சோகத்துடன் வீடு திரும்பினான், ராகவன்.

அவன் ஏதோ பிரச்னையில் இருக்கிறான் என்பதை உணர்ந்தாள், மீனாட்சி. கேட்க யோசனையாக இருந்தாலும், மனது கேட்கவில்லை. கோபம் வந்தால் ஒரு அறை கொடுப்பான். பார்த்துக் கொள்ளலாம் என விசாரித்தாள்.

அன்று அலுவலகத்தில் நடந்ததைச் சொன்னான், ராகவன்.

"ஒண்ணும் பிரச்னை இல்லை. எதுவானாலும் பேசி, தீர்த்துடலாம். கவலைப்படாதீங்க," என்றாள்.

மாலதியின் மொபைல் எண்ணை வாங்கி, அவளிடம் பேசி, வீட்டு விலாசத்தை தெரிந்து கொண்டு, "என்னோட வாங்க," என்றாள்.

"எங்கே?"

"வாங்க சொல்றேன்."

ராகவனை அழைத்து மாலதி வீட்டிற்குச் சென்றாள்.

கதவைத் திறந்த மாலதி, மீனாட்சியைப் பார்த்ததும், கண்களை அகலமாக விரித்து ஆச்சரியப்பட்டாள்.

"ஏய் மீனு, எப்படி இருக்க... காலேஜ் முடிச்சதுக்கப்புறம் தொடர்பே இல்லாம போச்சு. உள்ளே வா, என் விலாசம் எப்படி உனக்குத் தெரியும்?"

வெளியே தயங்கியபடி நின்றிருந்த ராகவனை அழைக்க, அப்போது தான் மாலதிக்குப் புரிந்தது.

"ஹேய், கொஞ்ச நேரத்துக்கு முன், நீதான் போன் பண்ணியா?"

"எஸ்..."

"உள்ளே வா!"

இருவரும் உள்ளே சென்று அமர்ந்தனர்.

"நீ எதுக்காக வந்திருக்கேன்னு புரிஞ்சுக்கிட்டேன். பிராப்ளம் சால்வ்ட்."

அவளிடம், "சாரி..." என்றான், ராகவன்.

புன்னகைத்தாள், மாலதி. "படிக்கும்போது, ஸ்விம்மிங் சாம்பியன். கராத்தே பிளாக் பெல்ட். நீ, மல்ட்டி டாலெண்ட்டெட் வுமன். எதுவுமே தெரியாத மாதிரி, சாந்தமா வந்து நிக்கிற?



"மீனாட்சி, எங்க காலேஜ்ல ரொம்ப பாப்புலர், சார். ஒருசமயம், பக்கத்து காலேஜ் பசங்க நாலு பேர் என்னை, 'பாலோ' பண்ணி தொந்தரவு பண்ணிகிட்டே இருந்தாங்க. எவ்வளவு சொல்லியும் கேட்கலை.

"மீனாட்சி தலையிட்டு, நாலு பேரையும் ரெண்டே தட்டு தான். நிலைகுலைஞ்சு போயிட்டானுங்க. அப்புறம் எங்க காலேஜ் பக்கமே வர்றதில்லை. அவ்வளவு போல்ட் வுமன்."

அன்றிரவு, மாலதியின் வீட்டிலேயே சாப்பிட்டுத் திரும்பினர்.

"நீ ஒரு பிளாக் பெல்ட். நான் உன்னை அடிச்சப்பல்லாம் கொஞ்சம் கூட, 'ரியாக்ட்' பண்ணாம அமைதியா இருந்துடுவே. திட்டினாக் கூட அமைதியா இருப்ப."

"அதுக்குக் காரணம் எங்கப்பா," என்றாள்.

புரியாமல் விழித்தான், ராகவன்.

"எங்கப்பா, பெண்களை ரொம்ப மதிக்கிறவர். எப்பவும், எந்த சூழ்நிலையிலயும், நான் கஷ்டப்படக் கூடாதுன்னு நினைக்கிறவர். எங்கம்மா ஏதாவது தப்பு பண்ணிட்டா, சாரின்னு சொல்வாங்க.

"பரவாயில்ல விடு, இதுக்குப் போய் எதுக்கு சாரியெல்லாம் சொல்றேன்னு சொல்வாரு. என்னை நீங்க அடிக்கறீங்கன்னு அவருக்குத் தெரிஞ்சா, மனசு உடைஞ்சுடுவாரு. அதனால தான், இந்த விஷயம் யாருக்கும், எந்த சூழ்நிலையிலயும் வெளிய தெரியக் கூடாதுன்னு முடிவு பண்ணினேன்."

கண்கள் கலங்கி, மனதளவில் உடைந்து போனான், ராகவன்.

அவனுடைய, 'ஈகோ' மெல்ல வெளியேறி, காற்றில் கரைந்து கொண்டிருந்ததை உணர்ந்தாள், மீனாட்சி

**அனுப்பியவர்: பொள்ளாச்சி முத்துராஜ்**



# உடலுக்கு பலம் சேர்க்கும் 'பழைய சோறு'

அமெரிக்காவில் உள்ள ஒரு பல்கலைக் கழகத்தில் ஒரு ஆராய்ச்சி செய்தார்கள் ... நம் பழைய சோறை வைத்து தான் ..!

முன்தினம் வடித்த சோறை நீர்விட்டு அதில் தயிரையும் சேர்த்துப் பிசைந்து சாப்பிட்டால் என்ன பலன் கிடைக்கும் என்று ... கிடைத்த முடிவுகளை பார்த்து மூக்கின் மேல் விரலை வைத்துக் கொண்டு சொன்னார்களாம், தமிழர்கள் சாதாரண மனிதர்கள் அல்ல ... அவர்கள் பெரிய விஞ் ஞானிகளாகத்தான் இருக்க வேண்டும் என்று ..!

ஏனெனில் தமிழர்களின் பாரம்பரிய உணவான பழைய சாதத்தில் வைட்டமின் பி 6 மற்றும் வைட்டமின் பி 12 ஏராளமாக இருக்கிறது. இந்த பழையதையும், தயிரையும் உண்டால்...

உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது..!

வெள்ளை அணுக்கள் அதிகரிக்கிறது..!

உடல் சோர்வை போக்குகிறது..!

உடலில் உள்ள அனுச்சிதைவுகளை தடுக்கிறது..!

உடல் சூட்டை தணிக்கிறது..!

வயிற்றிலுள்ள பழைய கழிவுகளை விரைந்து வெளியேற்றுகிறது..! உற்சாகமான மனநிலையைத் தருகிறது... என்று இப்படி பலவிதமான நன்மைகளைப் பட்டியலிட்டனர்..!!!

இந்த ஆராய்ச்சி முடிவுகள் வெளிவந்ததும், நம்மவர்கள் குப்பை உணவுகளான பர்கரையும், பீட்சாவையும், புரோட்டாவையும் தேடி அலைவது போல... உலகமே பழையசோறைத் தேடி அலைந்தது...!

HOW to MAKE PALAYA SORU?... என்று அமெரிக்கர்கள் இந்திய நண்பர்களிடமும், இணையத்திலும் கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டனர்...

ஆனால் இன்றைக்கு நம்மவர்கள் சளி பிடிக்கும், உடல் குண்டாகி விடும் என்றெல்லாம் சொல்லி பழையதை பழித்து தட்டிக்கழித்து வருகிறார்கள்... அது மிகப்பெரிய தவறு அல்லவா...

வெயில் காலங்களில் மட்டுமல்ல, அனைத்து நாட்களிலும் சாப்பிடுவதற்கேற்ற அருமையான உணவு பழையசோறுஞ்! சாப்பிட்டு மீதம் உள்ள சாதத்தில் சுமார் ஒரு மணிநேரம் கழித்து தேவையான அளவு தண்ணீரை ஊற்றி மூடிவைத்து 6 முதல் 8 மணிநேரம் கழித்து திறந்து பார்த்தால் அமிர்த பானம் தயார்... ஆம் அந்த நீரை மட்டும் சிறிது உப்பு கலந்து காலை வெறும் வயிற்றில் நீராகாரமாக அருந்தினால் ஆஹாஹா..! வயிறும் மனமும் ஒரே நேரத்தில் குளிரும்..!!!

இதில் தேவையான அளவு சாதத்தை ஒரு மண்சட்டியில் எடுத்து அதனுடன் தயிர் கலந்து சின்னவெங்காயம், வெண்டைக்காய் ஆகியவற்றையும் சிறிது சிறிதாக வெட்டிப்போட்டு, தேவைப்பட்டால் சிறிது உப்பையும் ஒரு பச்சை மிளகாயையும் கலந்து நன்றாக பிசைந்து சாப்பிட்டு பாருங்கள்...

ஆகா..! இதுதான் தேவாமிர்தம் என்பதை நீங்களே ஒப்புக்கொள்வீர்கள்...

இந்த உணவு முறையை வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமாவது கடைபிடியுங்கள்..!

பாற்கடலை கடைந்து அமிர்தம் எடுத்தவர்கள் தேவர்கள்... அரிசிப்பானையில் தேவாமிர்தம் எடுக்க கற்றுக் கொடுத்தவர்கள் நம் தமிழர்கள். என்ன இன்றைக்கே சாதத்தில் நீர் ஊற்றி வைத்து, நாளைக்கே நீராகாரமோ, பழைய சோறோ சாப்பிட ரெடியாகிட்டீங்களா..!

# பிள்ளைகளின் சுதந்திரமும் பெற்றோர்கள் பொறுப்பும்!



ஒரு புதிய கார்.. கல்லூரி நண்பர்கள்.. நீண்ட நாட்களுக்குப் பிறகு ஒன்றாக ஒரு சுற்றுலா.. மனதில் ஆயிரம் கனவுகளுடன் தொடங்கிய பயணம்..

ஆனால் ஒரு இரவு... ஒரு சாலை... ஒரு கண நேரத் தவறு... பல உயிர்கள் பறிபோவது குடும்பங்களை வாழ்நாள் முழுவதும் அழ வைக்கும் துயரமாக மாறிவிடும்.

இது அவர்களை குற்றம் சொல்லும் பதிவு அல்ல.

நம்மை நாமே கேள்வி கேட்க வேண்டிய பதிவு. பெற்றோர்களே... நாம் எங்கே தவறுகிறோம்? பிள்ளைகளுக்கு நல்ல கல்வி கொடுக்கிறோம். நல்ல செல்போன் வாங்கிக் கொடுக்கிறோம். புதிய கார் வாங்கிக் கொடுக்கிறோம். பணம் கொடுக்கிறோம்.

சுற்றுலா செல்ல அனுமதிக்கிறோம். அவர்கள் கேட்பதையெல்லாம் முடிந்தவரை செய்து கொடுக்கிறோம்.

ஆனால்.."வசதியை" கொடுக்கும் அளவுக்கு "பொறுப்பை" கற்றுக் கொடுக்கிறோமா? அதுதான் இன்று நாம் சிந்திக்க வேண்டிய மிகப்பெரிய கேள்வி.

"என் பிள்ளைக்கு கார் ஓட்டத் தெரியும்..."என்று சொல்வதற்கு முன், "அவனுக்கு இரவு நேரத்தில் நீண்ட தூரம் பாதுகாப்பாக ஓட்டும் அனுபவம் இருக்கிறதா?" என்று கேளுங்கள்.

"அவன் வேகமாக ஓட்டுவான்... திறமையானவன்" என்று பெருமைப்படுவதற்கு முன், "அவனுக்கு வேகத்தைக் கட்டுப்படுத்தத் தெரியுமா?"என்று கேளுங்கள். இரவு நேர ஓட்டுதல் விளையாட்டு அல்ல!

இருட்டில் சாலையோரத்தில் நிற்கும் லாரி தெரியாமல் போகலாம்.

எதிரே வரும் வாகனத்தின் வெளிச்சம் கண்களை மறைக்கலாம். தூக்கம் வரலாம்.

கவனம் சிதறலாம். சாலையின் நிலை மாறலாம். ஒரு சிறிய தவறு... ஒரு குடும்பத்தின் வாழ்நாள் துயரமாக மாறிவிடலாம்.

நண்பர்களே... "சவால்" வேண்டாம்! "இன்னும் வேகமாக போ..." "சீக்கிரம் போய்விடலாம்..." "எதுவும் ஆகாது...." என்று ஓட்டுநரிடம் சொல்லும் நண்பர்கள், நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: அது வெறும் வார்த்தை அல்ல... ஓட்டுநரின் முடிவை மாற்றக்கூடிய அழுத்தம். நண்பன் வேகமாக ஓட்டினால் கைதட்டி உற்சாகப்படுத்தாதீர்கள்.

"மெதுவாகப் போ... நம்மை வீட்டில் சிலர் காத்திருக்கிறார்கள்" என்று சொல்லுங்கள். அதுதான் உண்மையான நட்பு.

பெற்றோர்களே... இந்த 6 விஷயங்களை பிள்ளைகளிடம் சொல்லுங்கள்:

1 சீட் பெல்ட் இல்லாமல் காரில் பயணம் இல்லை.

2 செல்போன் பயன்படுத்திக்கொண்டு வாகனம் ஓட்டக்கூடாது.

3 வேகமாக ஓட்டுவது திறமை அல்ல.

4 தூக்கம் வந்தால் உடனடியாக வாகனத்தை நிறுத்தி ஓய்வெடுக்க வேண்டும்.



5 இரவு நேர நீண்ட பயணங்களில் போதுமான இடைவேளை அவசியம்.

6 நண்பர்கள் அழுத்தம் கொடுத்தாலும் பாதுகாப்பை விட்டுக்கொடுக்கக்கூடாது.

ஒரு முக்கியமான விஷயம்... குழந்தைகளுக்கு நாம் கொடுக்கும் மிகப்பெரிய பரிசு கார் அல்ல...

அந்தக் காரில் பாதுகாப்பாகச் சென்று மீண்டும் வீட்டிற்கு திரும்பும் பழக்கம்தான்!

குழந்தையை செல்லமாக வளர்ப்பது தவறல்ல.

ஆனால்... செல்லத்துடன் பொறுப்பையும் சேர்த்து வளர்ப்போம்.

வசதியுடன் கட்டுப்பாட்டையும் கற்றுக் கொடுப்போம்.

சுதந்திரத்துடன் பொறுப்பையும் கொடுப்போம்.

கடைசியாக ஒரு வேண்டுகோள்... இன்று உங்கள் மகன் அல்லது மகள் கார் எடுத்துக் கொண்டு வெளியே செல்லும்போது, "எப்போது வருவாய்?" என்று மட்டும் கேட்காதீர்கள்.

அதற்கு முன்... "பத்திரமாக ஓட்டு." "வேகம் வேண்டாம்." "தூக்கம் வந்தால் நிறுத்திவிடு." "செல்போன் எடுக்காதே." "எங்களைப் பார்க்க நீ திரும்பி வர வேண்டும்." என்று சொல்லுங்கள்.

ஏனென்றால்...நாம் அனுப்புவது காரை அல்ல..நம்முடைய உயிரின் ஒரு பகுதியைத்தான் வெளியே அனுப்புகிறோம்.

ஒரு விபத்து நடந்த பிறகு அழுவதற்குப் பதிலாக, விபத்து நடக்காமல் இருக்க இன்று முதலே பேசுவோம்.

வேகத்தைவிட வாழ்க்கை முக்கியம்.

காரைவிட குடும்பம் முக்கியம்.

சுற்றுலாவைவிட வீடு திரும்புவது முக்கியம். "பத்திரமாகச் செல்... பத்திரமாகத் திரும்பு."

# CCTV காமிரா பொருத்தும் முன்பு கவனிக்க வேண்டிய சட்ட விதிமுறைகள்!

சிசிடிவி கேமரா வைப்பதற்கு முன்பு இந்த சட்ட விதிகளை தெரிந்துகொள்ளுங்கள்.... இல்லையெனில் சிக்கல் வரலாம்!

உங்கள் வீடு, கடை அல்லது வணிக வளாகத்தில் கேமரா பொருத்த காவல்துறை அனுமதி தேவையா? தனியுரிமை மீறல் இல்லாமல் எப்படி பயன்படுத்துவது? அவசியம் தெரிந்துகொள்ளுங்கள்.தற்காலத்தில், பாதுகாப்பு காரணங்களுக்காக வீடுகள், கடைகள், அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்களுக்கு அருகில் சிசிடிவி கேமராக்களை நிறுவுவது மிகவும் சாதாரணமாகிவிட்டது. திருட்டு மற்றும் குற்றங்கள் அதிகரித்து வரும் இந்தக் காலகட்டத்தில், மக்கள் தங்கள் சொத்துக்களைப் பாதுகாக்க தொழில்நுட்பத்தை நம்பியுள்ளனர்.

இருப்பினும், ஒரு சாமானிய மனிதன் தனது வீடு அல்லது கடைக்கு அருகில் சிசிடிவி கேமராவை நிறுவ விரும்பும்போது, அதற்கு ஏதேனும் சட்டப்பூர்வ அனுமதிகள் தேவையா?

காவல்துறை ஆட்சேபனை தெரிவிக்குமா? என்பது குறித்து பலருக்கும் சந்தேகம் எழுகிறது.

கேமராவின் காட்சிகள் மற்றவர்களின் தனியுரிமையை மீறாமல் இருப்பதை எவ்வாறு உறுதி செய்வது? என்பது குறித்து ஒவ்வொரு குடிமகனும் தெளிவான புரிதலைக் கொண்டிருப்பது மிகவும் முக்கியம். ஒரு வீடு அல்லது கடைக்கு அருகில் சிசிடிவி கேமரா பொருத்த காவல்துறை அனுமதி தேவையா?:



பொதுவாக, ஒருவர் தனது சொந்த வீட்டிற்கு அருகில் கேமரா பொருத்த காவல்துறை அல்லது உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து முன் அனுமதி பெறத் தேவையில்லை. இருப்பினும், பொதுப் பாதுகாப்பு (நடவடிக்கைகள்) அமலாக்கச் சட்டத்தின் படி, 100க்கும் மேற்பட்டோர் வசிக்கும் அடுக்குமாடி குடியிருப்புகள், வணிக வளாகங்கள், கடைகள் மற்றும் பொது இடங்களில் சிசிடிவி கேமராக்கள் கட்டாயம் பொருத்தப்பட வேண்டும்.

இந்தச் சட்டத்தின் கீழ், சிசிடிவி காட்சிகள் குறைந்தபட்சம் 30 நாட்களுக்குப் பாதுகாக்கப்பட வேண்டும். ஒரு குற்றவியல் விசாரணையின் போது காவல்துறை கேட்டால், அந்தப் பதிவுகளை உடனடியாக வழங்குவது உரிமையாளர்களின் பொறுப்பாகும்.

இது வணிக வளாகங்களுக்கு ஒரு சட்டப்பூர்வக் கடமையாகும். வீடுகள் மற்றும் பகிரப்பட்ட குடியிருப்புப் பகுதிகளுக்கு அருகில் கேமராக்களை நிறுவும்போது பின்பற்ற வேண்டிய சில கடுமையான விதிகள் உள்ளன.

அடுக்குமாடிக் குடியிருப்புகளில், நுழைவாயில்கள், வரவேற்பறைகள் மற்றும் வாகன நிறுத்துமிடங்கள் போன்ற பொதுவான இடங்களில் மட்டுமே கேமராக்கள் நிறுவப்பட வேண்டும்.

பகிரப்பட்ட சொத்துக்களைப் பொறுத்தவரை, 2025ல் உச்ச நீதிமன்றம் வழங்கிய ஒரு முக்கியத் தீர்ப்பின்படி, அனைவரது (கூட்டுக் குடியிருப்பாளர்களின்) அனுமதியின்றி பகிரப்பட்ட வசிப்பிடங்களில் சிசிடிவி கேமராக்களை நிறுவுவது தனியுரிமைக்கான அடிப்படை உரிமையை மீறுவதாகும்.

எனவே, அண்டை வீட்டாரின் ஒத்துழைப்புடன் அது நிறுவப்பட வேண்டும். அவர்கள் அதை விரும்பவில்லை என்றால், அதற்கான வலுவான காரணங்கள் ஏதேனும் உள்ளதா என்பதைக் கண்டறிய வேண்டும். சிசிடிவி கேமராக்களின் நன்மைகள் அவர்களுக்கு விளக்கப்பட வேண்டும். இருப்பினும், கேமராக்களை நிறுவுவது தனிநபர்களின் தனிப்பட்ட சுதந்திரத்தில் தலையிடக்கூடாது என்று நீதிமன்றங்கள் மீண்டும் மீண்டும் எச்சரித்துள்ளன.

உங்கள் வீட்டின் முன் சாலையை உள்ளடக்கும் வகையில் ஒரு சிசிடிவி கேமராவை நிறுவுவது ஒரு பிரச்சனையாக இருக்குமா என்று நீங்கள் யோசிக்கலாம்.

ஒரு பொதுச் சாலையைப் பதிவு செய்வது பொதுவாக

ஒரு குற்றமல்ல. ஏனென்றால், ஒரு பொது இடத்தில் தனியுரிமைக்கான எதிர்பார்ப்பு இல்லை.

பாதுகாப்பு காரணங்களுக்காக, நுழைவு மற்றும் வெளியேறும் வாயில்களை உள்ளடக்கி சாலையைப் பதிவு செய்வது, குற்றவியல் விசாரணைகளில் காவல்துறைக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

திருடன் படிக்கட்டுகளில் இறங்கிய பிறகு தப்பி ஓடிய திசையை அந்தக் கேமரா பதிவு செய்யும்.

இருப்பினும், உங்கள் கேமராவின் குவியம் வேண்டுமென்றே உங்கள் அண்டை வீடுகளின் முன் கதவு, ஜன்னல்கள் அல்லது பால்கனிகளை நோக்கித் திருப்பப்படக்கூடாது. அதன் வரம்பு உங்கள் சொத்தைப் பாதுகாப்பதற்கு மட்டுமே வரையறுக்கப்பட வேண்டும். உங்கள் கேமரா உங்கள் அண்டை வீட்டாரின் அந்தரங்க பகுதிகளை பதிவுசெய்தால், சட்டரீதியான விளைவுகள் ஏற்படும். தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் (மிஜி சட்டம் 2000) பிரிவு 66ணிஇன் படி, மற்றவர்களின் அனுமதியின்றி அவர்களைப் பதிவு செய்வது அல்லது அவர்களின் படங்களை எடுப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

இக்குற்றத்திற்கு 3 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை அல்லது அபராதம் விதிக்கப்படலாம். 2017ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் வழங்கிய புட்டசுவாமி தீர்ப்பின் அடிப்படையில், அரசியலமைப்பின் 21வது பிரிவின் கீழ் தனியுரிமை ஒரு அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே, மற்றவர்களின் தனியுரிமை மீறப்பட்டால், அவர்கள் உரிமையியல் நீதிமன்றத்தை அணுகி இழப்பீடு கோரலாம்.

இந்தியாவில் புதிதாக இயற்றப்பட்ட 'டிஜிட்டல் தனிநபர் தரவுப் பாதுகாப்புச் சட்டம், 2023 (டிபிடிபி சட்டம்)' சிசிடிவி பயன்பாட்டிலும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இந்தச் சட்டத்தின்படி, கேமராவில் பதிவு செய்யப்படும் மக்களின் முகங்களும் நடமாட்டங்களும் 'தனிநபர் தரவு' என்ற வகையின் கீழ் வருகின்றன.

எனவே, குடியிருப்பு சங்கங்கள் அல்லது வணிக வளாகங்கள் போன்ற இடங்களில் சிசிடிவி கேமராக்கள் நிறுவப்படும்போது, "நீங்கள் சிசிடிவி கண்காணிப்பில் உள்ளீர்கள்" என்று தெளிவாகக் குறிப்பிடும் அறிவிப்புப் பலகைகள் (அறிவிப்புகள்) நிறுவப்பட வேண்டும்.

மேலும், சேகரிக்கப்பட்ட தரவுகள் பாதுகாப்பு நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

அவை தேவையற்ற நீண்ட காலத்திற்குச் சேமித்து வைக்கப்படக்கூடாது.வாடகைச் சொத்துக்களைப் பொறுத்தவரை சிசிடிவி கேமரா விதிகள் மிகவும் தெளிவாக உள்ளன. உரிமையாளர்கள் தங்கள் சொத்தைப்




பாதுகாக்க கேமராக்களை நிறுவலாம், ஆனால் அந்தக் கேமராக்கள் குத்தகைதாரர்களின் அன்றாட நடவடிக்கைகளையோ அல்லது அவர்களின் வீட்டு வாசலின் உட்புறத்தையோ பதிவு செய்யக்கூடாது.

குத்தகைதாரர்களுக்கு அந்தச் சொத்தின் மீது சட்டப்பூர்வ உரிமை இருப்பதால், அவர்களின் அமைதியான வாழ்விற்கு இடையூறு விளைவிக்கும் வகையில் அவர்களைத் தொடர்ந்து கண்காணிப்பது சட்டவிரோதமாகும். வீட்டு உரிமையாளர் இதுபோன்ற செயல்களில் ஈடுபட்டால், குத்தகைதாரர்கள் தங்கள் தனியுரிமைகளைப் பாதுகாக்க காவல்துறை அல்லது நீதிமன்றத்தை அணுக முழு உரிமை உண்டு.முடிவாக, சிசிடிவி கேமராக்கள் நமக்கு ஒரு பாதுகாப்புக் கவசம் என்பதில் சந்தேகமில்லை, ஆனால் அவற்றை பொறுப்புடன் பயன்படுத்துவது அவசியம்.

தனியார் வீடுகளுக்கு காவல்துறை அனுமதி தேவையில்லை என்றாலும், வணிக நிறுவனங்கள் உள்ளூர் பொதுப் பாதுகாப்புச் சட்டங்களுக்கு இணங்க கேமராக்களை நிறுவ வேண்டும்.அவை சாலையை உள்ளடக்குவது நல்லது, ஆனால் கேமராக்களை அண்டை வீட்டார்களின் பால்கனிகள் மற்றும் ஜன்னல்களை நோக்கித் திருப்பாமல் கவனமாக இருக்க வேண்டும். முறையான அறிவிப்புப் பலகைகளுடன் சிசிடிவி கேமராக்களை நிறுவுவதன் மூலமும், சட்டத்தின் விதிகளையும் மற்றவர்களின் தனியுரிமைகளையும் மதிப்பதன் மூலமும், எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய எந்தவொரு சட்டரீதியான சர்ச்சைகளிலிருந்தும் நாம் பாதுகாப்பாக இருக்க முடியும்.

# எறும்புகளில் இத்தனை வகைகளா!

1. கருப்பு தோட்ட எறும்பு (Black Garden Ant)

நகர்ப்புறங்களிலும் தோட்டங்களிலும் அதிகம் காணப்படும் இனம். சர்க்கரைப் பொருட்கள், சிறிய பூச்சிகள் மற்றும் கரிமக் கழிவுகளை உணவாகக் கொள்கிறது. இயற்கைச் சூழலின் சமநிலையைப் பாதுகாக்க முக்கிய பங்கு வகிக்கிறது.

2. மரத் தச்சு எறும்பு (Carpenter Ant)

மரங்களில் சுரங்கங்களை உருவாக்கி கூடுகளை அமைக்கிறது. கரையான்களைப் போல மரத்தை உணவாகக் கொள்ளாது. ஆனால் பெரிய கூட்டங்களாக வளரும்போது கட்டிடங்களுக்கு சேதம் ஏற்படுத்தலாம்.

3. நெருப்பு எறும்பு (Fire Ant)

மிகவும் வலியூட்டும் கொட்டுக்காக பிரபலமானது. கூட்டமாக தன் கூட்டைப் பாதுகாக்கும். இதன் விஷம் கடும் எரிச்சல், வீக்கம் மற்றும் சிலருக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தலாம்.

4. பாரோ எறும்பு (Pharaoh Ant)

மஞ்சள் நிறத்தில் சிறியதாக இருக்கும். வீடுகள், மருத்துவமனைகள் மற்றும் கட்டிடங்களில் எளிதில் பரவி நுண்ணுயிரிகளை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு எடுத்துச் செல்லக்கூடும்.

5. பேய் எறும்பு (Ghost Ant)

இதன் கால்கள் மற்றும் வயிற்றுப் பகுதி கிட்டத்தட்ட வெளிப்படையாக இருப்பதால் எளிதில் கவனிக்க முடியாது. இனிப்பு உணவுகளைத் தேடி வீடுகளில் அடிக்கடி காணப்படுகிறது.

6. அர்ஜென்டினா எறும்பு (Argentine Ant)

தென் அமெரிக்காவைச் சேர்ந்தது. உலகின் மிகவும் வெற்றிகரமான ஆக்கிரமிப்பு இனங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. கோடிக்கணக்கான எறும்புகளைக் கொண்ட சூப்பர் காலனிகளை உருவாக்கும் திறன் உடையது.

7. நெசவாளர் எறும்பு (Weaver Ant)

இலைகளை ஒன்றோடொன்று தைத்து கூடு அமைக்கும் அற்புத திறன் கொண்டது. மரங்களில் வாழும் இவை, கூட்டாக இணைந்து மிகவும் வலுவான தொங்கும் கூடுகளை உருவாக்குகின்றன.



8. இலை வெட்டும் எறும்பு (Leafcutter Ant)

இலைகளை உணவாக அல்ல, பூஞ்சை வளர்க்கும் விவசாயப் பொருளாகப் பயன்படுத்துகிறது. வளர்க்கும் பூஞ்சையே இதன் முக்கிய உணவாகும்.

9. விதை சேகரிக்கும் எறும்பு (Harvester Ant)

விதைகளை சேகரித்து சேமிப்பதில் நிபுணத்துவம் பெற்றது. பல தாவர இனங்களின் பரவலுக்கும் இயற்கை மீளுருவாக்கத்திற்கும் உதவுகிறது.

10. மணமுள்ள வீட்டு எறும்பு (Odorous House Ant)

நசுக்கப்படும் போது தேங்காய் அல்லது கெட்டுப்போன வெண்ணெய் போன்ற தனித்துவமான மணத்தை வெளியிடுகிறது. வீடுகளில் பொதுவாகக் காணப்படும் இனம்.

11. புல்லட் எறும்பு (Bullet Ant)

உலகின் மிகவும் வேதனையான கொட்டுகளில் ஒன்றைக் கொண்டுள்ளது. இதன் கொட்டின் வலி துப்பாக்கிக் குண்டு பாய்ந்ததற்கு ஒப்பிடப்படுகிறது. பல மணி நேரம் நீடிக்கக்கூடியது.

12. டிராப்ஜா எறும்பு (Trap-Jaw Ant)

உலகிலேயே அதிவேகமான தாடைகளில் ஒன்றைக் கொண்டுள்ளது. கணநேரத்தில் தாடைகளை மூடி இரையைப் பிடிக்கவோ அல்லது எதிரிகளிடமிருந்து தப்பிக்கத் தன்னையே தூக்கி எறியவோ முடியும்.

சுவாரஸ்ய தகவல்: உலகம் முழுவதும் இதுவரை 14,000க்கும் மேற்பட்ட எறும்பு இனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இன்னும் ஆயிரக்கணக்கான இனங்கள் கண்டுபிடிக்கப்படாமல் இருப்பதாக விஞ் ஞானிகள் நம்புகின்றனர். பூமியில் மிகவும் ஒழுங்காகவும் வெற்றிகரமாகவும் வாழும் உயிரினங்களில் எறும்புகளும் ஒன்றாகும்.







திருப்பூர் தொழிலதிபர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆசிரியர் அவர்களை சந்தித்து தமது இல்ல திருமணத்திற்கு வருகை தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அப்போது அவர்களுக்கு ஆசிரியர் அவர்கள் சால்வை அணிவித்து அவர்களது குடும்பத்தாரிடம் முருகன் உருவம் பொறித்த வெள்ளி டாலரை வழங்கி கௌரவித்தார்.

POSTED AT EGMORE/RMS. PATRIKA CHANNEL. POSTED ON. 1-7 October 2026
MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/2025-2027
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month
WPP No. TN/PMG(CCR)/WPP-609/2025-2027




22.09.2026 செவ்வாய்க்கிழமை சென்னை பீட்டர்சன் கேன்சர் சென்டரில் நடைபெற்ற ரோஸ் டே விழாவிற்கு வருகை தந்த மித்ரா டைம்ஸ் ஆசிரியர், மித்ரா குழும நிறுவனங்களின் தலைவர் திரு.எம்.எஸ்.மூர்த்தி அவர்களுக்கு விழா குழுவின் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

From:

MITRA TIMES ,Tamil and English monthly 101,Inchakkal Block, Chitra Avenue 9, Choolaimedu High Road, Chennai .600094. 044-23744661,23743007/8. mitratimes2015@gmail.com, www.mitratimes.com

Printed, Owned and Published by M.SUNDARAMOORTHY, Printed at SRI PADMALAYA PRINTERS, No.8/18, Manali Salai, Korukupet, Chennai - 600 021. Published at No.602, Suruthi Block, Chitra Avenue, No.9, Choolaimedu High Road, Chennai - 600 094. Editor M.SUNDARAMOORTHY